எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று கொட்டுமுரசே!

கோவை முரசு

கோவை முரசு, வெளியீடு: ஆசிரியை S. P. மீனாட்சி அம்மாள்...

கொங்குநாட்டு வேந்தர்
உயர்திரு, V. C. வெள்ளிங்கிரிக் கவுண்டர்,
M. L. A., (Central) அவர்கள்.

1-12-47. 4 அணா.

நாமிருக்கும் நாடு நமதே!

வெட்டுக்களின் செய்தே தங்க
முதலாம், வேறுபல பொருளும்
குடைந்தெடுப்போம் எட்டுத்திசை
களும் சென்றிவை, விற்றே எண்ண
ரும் பொருள்களை கொண்டு வருவோம்.



நாங்கள் தயாரித்த ஸ்பின்னிங் ப்ரேம்கள்
தென்னிந்தியாவிலுள்ள பல மில்களிலும்
வட இந்திய மில்லுகளிலும் திருப்திகரமாக
உழைத்து வருகின்றன.

புது ஸ்பின்னிங் மில்லுகளுக்கு வேண்டிய
எல்லா மெஷின்களும் நாங்கள் சப்ளை செய்கிறோம்.

டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி நெ. 221.
கோயமுத்தூர்.

கோவை ஷண்முக அரங்கில்

டி. கே. எஸ். சகோதரர்களின்

புதிய நாடகங்கள்

உயிரோவியம்
நாரண துரைக்கண்ணன்

புயல்
'அகிலன்'

வீரப் பெண்
பி. எக்ஸ். ரங்கசாமி

அவள் விபசாரியா
ல. சேதுராமன்

சேரன் செங்குட்டுவன்
ரா. வேங்கிடாசலம்

இராஜராஜ சோழன்
அரு. இராமனுதன்

||

அரங்கேறும் நாளை எதிர்பாருங்கள்!

11-11-47 முதல்

"ஔவையார்"

நடைபெற்றுவருகிறது.

பங்கஜா மில்ஸ்

லிமிடெட்.

(1932-A ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : கோயமுத்தூர்.

கோயமுத்தூரில், பேர்பெற்ற மில்களின் வரிசையில்சேர்ந்த இம்மில் தக்க அநுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்படுகிறது

: ஸ்பின்னிங் :

80-நெ. வரை ரிங்கு நூல்

மற்றும் இதே இனத்தில்

டப்ளிங்கும் தயாரிக்கப்படுகிறது

வருடந்தோறும் பங்குதார்கட்கு நல்ல வட்டி தரப்பட்டு வந்துள்ளது

இந்திய முதல் இந்திய தொழிலாளர்

இந்திய நிர்வாகம்

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்றுவருகின்ற

தேசிய தொழில் ஸ்தாபனமாகும்

ஆதலால்

இந்த மில் நூலை அனைவரும் ஆதரியுங்கள்

Managing Agents and Secretaries :—

C. S. RATNASABAPATHI MUDALIAR & SONS,

COIMBATORE.

தந்தி : 'வசந்தா' கோயமுத்தூர் போன் : நெ 25

வசந்தா மில்ஸ்
லிமிடெட்.

ரிஜிஸ்டர் ஆபீஸ் : சிங்காநல்லூர்

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ் ;

R. K. ஷண்முகம் செட்டி & பிரதர்ஸ்

1934-ல கள்ளிக்கோட்டையில் நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்

நூற்றல் :

20 நெ. முதல் 44 நெ. வரை ஒத்தை முறுக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்,

வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், சர்டிங், மல், கதர் தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிலாத் மார்க்கட்டில் பேர் பெற்றது 600 நெ காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே

போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்

போன் { ஆபீஸ் : 105
பங்களா : 47
தந்தி : சாரதா

ஸ்ரீ சாரதா மில்ஸ் லிமிடெட்

போத்தனூர் (கோயமுத்தூர்)

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் & செக்ரடரீஸ்

V. S. செங்கோட்டையா & பிரதர்ஸ்

கதிர்கள் : 14000   தறிகள் : 171

நூல் :

10 நெ. முதல் 60 நெ. வரை எல்லாவிதமான நூல் தினுசுகளும், ஒற்றை, இரட்டை நூல், கார நூல், சலவை நூல், முதலியன தயார் செய்கிறோம்

நெசவு :

எல்லாவிதமான ஜவுளிரகங்களும், உயர்தரமான ஷர்ட்டிங் கோட்டிங், லாங்கிளாத், காடா, கதர், டவல், வேஷ்டி முதலியவைகளும் தயார் செய்கிறோம்

இந்திய மூலதனம்   இந்தியர் உழைப்பு
இந்தியர் நிர்வாகம்

இந்திய கைத்தொழிலை ஆதரித்து இந்தியத் தொழிலாளர்களுக்கு உணவு கொடுங்கள்

ஸ்ரீ

தந்தி : "பயனீர்" கோயமுத்தூர் டெலிபோன் 160

கோயமுத்தூர்

பயனீர் மில்ஸ்

லிமிடெட்.

பீளமேடு - கோயமுத்தூர்

ரிஜிஸ்தரான ஆபீஸ்

பீளமேடு, கோயமுத்தூர் ஜில்லா

உயர்ந்த 10 நெ முதல் 100 நெ வரை
நூல் தயார் செய்கிறோம்.

மேல்கொண்டு விபரங்களுக்கு மானேஜிங்
ஏஜண்டுகளுக்கு எழுதவும்

மானேஜிங் ஏஜண்ட்ஸ் :

T. R. நாராயணசாமி நாயுடு & கம்பெனி

குமரன் மில்ஸ்

லிமிடெட்

புதுப்பாளையம் : கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம், மானேஜ்மெண்ட், தொழிலாளர்
எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்
சுதேசி நூலையே வாங்குங்கள்.

28, 60, 80 நெ. தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே
நிர்வாகஸ்தர்களது நோக்கம்

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின்
வரிசையில் இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது

கல்வி, தொழில், அனுபவம் நிறைந்தவர்களால்
நிர்வகிக்கப்பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல டிவிடெண்டு
பெற்றுவருகிறார்கள்

Managing Agents :

N. Appuswamy Naidu & Co.,

Managing Director :

G. A. Muthuswamy B. Sc.

போன் : 70 தந்தி : "ஸ்பின்னிங்"

ஸ்பின்னிங் அண்டு வீவிங்
கம்பெனி லிமிடெட்.
கோயமுத்தூர்

மூலதனம் ரூ. 14,00,000

வசூலான தொகை ரூ. 6,92 300

டைரக்டர்கள் :

ஸ்ரீ வி. கோபால நாயுடு
" வி. ரங்கசாமி நாயுடு
" ஏ. வி. ஸ்ரீனிவாசலு நாயுடு
" சி ஆர். சதாசிவம்
" ஆர். வி. லட்சுமைய்ய நாயுடு

கதிர்கள் : 45,000 **தறிகள் : 280**

நூல் : 60 நெ. வரை எல்லாவிதமான நூல்களும், பனியன் கார்கம், சலவை முதலிய எல்லா விதமான நூலும் கிடைக்கும்

நெசவு : எல்லாவித ஜவுளிகள், உயர்ந்த ஷர்ட்டிங், லாங்லாத், கதர் துவாலைகள், வேஷ்டிகள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன

சுதேச மூலதனம் பாரதத் தொழில்

பாரதீய நிர்வாகம்

Agents & Secretaries :

COIMBATORE MILLS AGENCY LTD.,

COIMBATORE.

ஸ்ரீ ராமலிங்க சௌடாம்பிகை மில்ஸ் லிமிடெட்

திருப்பூர்

கோவை ஜில்லாவிலே, பேர்பேற்ற மில்களின் வரிசையில் சேர்ந்த இம்மில் தக்க அனுபவம் வாய்ந்தவர்களால் நிர்வகிக்கப்பெற்றுவருகிறது.

ஸ்பின்னிங்

40 நெ. வரை ரிங்கு நூல்

வருடந்தோறும் பங்குதாரர்கட்கு நல்ல வட்டி தரப்பட்டுவந்துள்ளது

இந்திய மூலதனம்! இந்திய தொழிலாளர்!! இந்திய நிர்வாகம்!!!

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெறுகிற தேசிய தொழில் ஸ்தாபனமாகும். ஆதலால் இந்த மில் நூலை அனைவரும் ஆதரியுங்கள்

Managing Agents & Secretaries :

S. R. சொக்கலிங்க செட்டியார்,

திருப்பூர்.

கோவை

— முரசு —

மாத வெளியீடு.

மலர் 1	1—12—47.	இதழ் 1

ஆசிரியை :

S. P. மீனாட்சியம்மாள்

நிர்வாக ஆசிரியர் :

S. A. மாணிக்கம்

பிரசுரம் :

"கோவை முரசு" நிலையம்.

சூலூர் P. O. (கோவை ஜில்லா)

விலை 4 அணா] [வெளி நாடு 5 அணா

எழுத்தாளர்களுக்கு :

1 தமிழ் இலக்கியம், கலைவளர்ச்சி, சமூக சீர்திருத்தம், சரித்திரம், விஞ்ஞானம், முதலியவை சம்பந்தமான சிறு கதைகள், ஆராய்ச்சி கட்டுரைகள், சிந்தனைச் சுடர்கள், ஹாஸ்ய (எழுத்துச்) சித்திரங்கள், இனிய எளிய கவிதைகள், முதலியன 'முரசு'க்கு இன்பமூட்டுபவை.

2 எழுதும்போது தாளின் இடது பக்கம் போதிய இடம்விட்டுத் தெளிவாக - கூடிய வரை நல்ல கையெழுத்தில் - இனிய எளிய தமிழில் எழுதவும்.

3 அதிகமானல் 'முரசில்' நான்கு பக்கங்களுக்கு மேல் போகாதவண்ணம் பார்த்துக்கொள்ளவும்.

4 மொழி பெயர்ப்பு அல்லது தழுவலானல் குறிப்பிடுக.

5 இளம் எழுத்தாளர்களுக்கு ஆதரவு தரப்படும்.

V. C. Vellingiri Gounder M.L.A., (Central)

Vellakkinar P. O.
Coimbatore Dt.
23—4—47.

திரு. மாணிக்கம் அவர்கட்கு,

தங்கள் 25 தேதி எழுதிய கடிதம் பார்த்தேன். தாங்கள் ஆரம்பித்துள்ள 'கோவை முரசு" பத்திரிக்கையைப் பார்த்தேன். அதன் நோக்கமாகிய சமூக முன்னேற்றம், கல்வி, பெண்கள் முன்னேற்றம் தாழ்த்தப்பட்டோர் விடுதலை, இவைகளில் நான் மிகவும் நம்பிக்கையுடையவன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். தங்கள் முயற்சி வெற்றிபெற பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள

V. C. VELLINGIRI GOUNDER.

M. P. SIVAGNANAM
Editor, 'Tamil Murasu'

MADRAS,
30-4-47.

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

"கோவை முரசு" என்ற பெயருடன் கொங்கு நாட்டில் தமிழ் மாதப் பத்திரிகை யொன்று வெளிவருவதையறிந்து மகிழ்ச்சிகொள்கிறேன்.

தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் சேவை செய்ய வீட்டுக்கொரு 'முரசு' வெளிப்பட்டாலும் நன்மையே, 'கோவை முரசு' தமிழ் இனத்திற்குச் சேவை செய்வதாகுக.

அன்பன்

மா, பொ. சிவஞானம்.

டி. ஆ. பெ. விசுவநாதம்,
ஆசிரியர், 'தமிழர் நாடு'

திருச்சி,
27-4-47.

அன்புள்ள ஐயா, வணக்கம்

"கோவை முரசு" பத்திரிக்கையைப் பார்த்து பெரிதும் மகிழ்ந்தேன். நல்ல முறையில் "கோவை முரசு" நாடு முழுவதும் பரவி, நாட்டிற்கும் மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு செய்வதின்மூலம் நன்கு வளர்ச்சியடையவேண்டும் என ஆசைப்படுகிறேன்.

தங்களன்பிற்குரிய

டி. ஆ. பெ. விசுவநாதம்

வாழ்க "கோவை முரசு"

"இளங்கதிர்"

கோவையிலே தமிழ் முரசுதனைக் கொட்டவேண்டி
கோவைக்கடுத்த சூலூர் நிலையந்தன்னில்

பாவையராம் மீனாட்சியம்மை ஆசிரியையாக
பொழிந்திடும் 'கோவை முர'செந்தம் கொட்டிடவே

போருக்கு முன்பு முரசு கொட்டினர் — இன்றே
புகட்டிட நல் அறிவைக் கொட்டுறார்

யாருக்கும் சளைக்காத தமிழர்கள்
யாருக்குமிணையில்லை எனவாழவே

முரசின் ஒலி எங்கும் கேட்டிடுவீர் — அதில்
முழங்கும் உண்மை உணர்ந்திடுவீர்!

அரசு கொள்ள தமிழா, விரைவினிலே — இனி
அயர்ந்த நிலை விழித்தெழுவாய்.

P. S. G. GANGA NAIDU, PEELAMEDU,
Sri Ranga Vilas Mills, Ltd., Coimbatore.
8-11-47.

ஆசிரியர் S. A. மாணிக்கம் அவர்களுக்கு,

இப்பவும் தாங்கள் ஆரம்பித்துள்ள 'கோவை முரசு' என்னும் பத்திரிக்கையை நான் படித்து சந்தோஷமடைந்தேன். நம் நாட்டு மக்களிடையே, தற்போது நிலவிவரும் குறைகளை நீக்குவதற்கென்று அவ்வப்போது கட்டுரைகள் எழுதி பிரசுரிப்பது நன்மை பயக்கக்கூடியதே. சமூக சேவை பல்லாண்டு புரிய இறைவன் அருள் புரிவாராக. முக்கியமாக அரிஜன சேவையில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். வெற்றி உண்டாவதாகுக,

இங்ஙனம்

P. S. G. Ganga Naidu
தலைவர்
கோ. அரிஜன சேவா சங்கம்

உதிர்ந்த மலர்கள்.

(By C. N. A.)

நாவலர்களும் பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலு பக்கமும் வேலிகள் அமைத்து அங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச்சுவரை எழுப்பி வைத்துக்கொண்டு "உள்ளே ஆடுது காளி, வேடிக்கைப்பார்க்க வாடி" என்பது போலத் "தொல் காப்பியத்தைப் பாரீர், அதன் தொன்மையைக் காணீர்" என்றால் அதனிடம் யார் அணுகுவர்? சங்க இலக்கியங்களை வீட்டைவிட்டு வெளியேற்றி நாட்டிலே நடமாடவிடவேண்டும். நடன சுந்தரிகளாகச் சிறுசிறு பிரதிகள் மூலம் தொல் காப்பியக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால் தான், தொல்காப்பியம் சிறுசிறு குழந்தைகளாக ஒவ்வொருவர் மடியிலேயும் மனத்திலேயும் தவழும்; ஒவ்வோர் இல்லமும் இலக்கியப் பூங்காவனக் காட்சியளிக்கும்.

சமூக சீர்திருத்தம்

(ஆசிரியை S P. மீனாட்சியம்மாள்)

சமூக சீர்திருத்தத்தைப்பற்றி, எவ்வளவு வேண்டுமானாலும், எழுதலாம், பேசலாம், எழுதிப் பயன் என்ன ? பேசித்தான் பயன் என்ன ? அதை நினைக்கும்போதே நெஞ்சம் குமுறுகிறது. சமூக உணர்வுடைய ஒவ்வொருவருக்கும் குமுறத்தான் செய்யும். என்? அதில் சந்தேகமே இல்லை.

உயர்ந்த எண்ணம் உண்டாகும் வரை, எந்தச் சமுதாயமும் உயரிய நிலையை அடையப்போவதில்லை, இது திண்ணம், சமூக உணர்ச்சியற்றவன் தான் பிறந்த சமூகத்திற்கே ஒரு பெரும் இழுக்கைத் தேடித்தரும் மனிதன் ஆவான், துரோகி என்று கூறுவதில் தவறொன்றும் இல்லை.

தனது சமூக மக்கள், தன்மை கெட்டு, தன் மானமிழந்து தக்க மதிப்பு யாதுமின்றி, பட்டமரம், இருண்ட வீடு, வறண்ட தடாகம், வாடிய மலர், நிலவு காணா இரவு, ஆகியவைகளைப்போன்று, பரிதவிக்கும் ஒரு நிலையைக் கண்டு ஒருவன் சும்மா இருப்பானாயின், அதனை என்னென்று சொல்வது? சும்மா இருந்தாலும்கூடச் சுகம் எனக் கருதலாம், சிலர் இருக்கிறார்கள், எதற்கு? தேசமிருக்கும் நிலையிலே சங்கமாம் சங்கம் சமூகச் சங்கம். என்று ஏளனம் செய்வதற்கு, உனக்கென்ன தெரியம் என உறையாடுவதற்கு இவற்றையெல்லாம் நினைக்குந்தோறும், சமூக உணர்வுடைய, ஒவ்வொருவருக்கும், இருதயம் என் துடிக்கச்செய்யாது?

இப்படிப்பட்டவர்களின், தன்மைகளையெல்லாம் எடுத்து விளக்கப் புகுந்தால், சமூகம் என் இந்தச் சரிந்த நிலையை அடைகிறதென்று முடிவு, கட்டிவிடலாம், பிறர் வாழ மனம் சகிப்பதில்லை, தன் இனத்தான்வாழத் தான் மனம் சகிப்பதில்லை, தான் வாழ வகையறியான், சம்மதிப்பதில்லை, அவனா ? அவனுக்கா ? அப்படியா? என்று பிறர் வாழ்வு கண்டு பொறாமை கொள்ளும் தீய பழக்கம்

முதலில் ஒழிதல்வேண்டும், (தோழர்களே இது எல்லாச் சமூகத்திலும் காணப்படும் பொது நிலையைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன்) என்ன கெட்ட எண்ணம் என்பதை எண்ணிப்பாருங்கள். உணர்வுடைய சமூகத் தோழர்களே! தானும் வாழ்வதில்லை, பிறர் வாழச் செய்வதுமில்லை இதனாலன்றோ நம் சமூகம் இன்னும் இழிந்த நிலையை எட்டிவிடுமோ என்ற அச்சமும், ஐயமும் கொள்ள வேண்டியிருக்கிறது, ஆனால் அச்சமும் ஐயமும் வேண்டுவதில்லை. நம் குலத் தலைவர்கள் இருக்கிறார்கள். எதிர்காலத்தில் ஆவன செய்வார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

உணர்வு ஊற்றுப் பெருக்கெடுத்தோட, இன உணர்ச்சியும் சமூக ஆர்வமும் பொங்கிச் சரமாரியாகப் பொழிய, எண்ணற்ற எழுத்து மலர்களை அள்ளி யிறைத்து வருகிறார் நமது அறிஞர் C. N. அண்ணாத்துரை அவர்கள் சீர்திருத்த பாதையிலே பெரும் புரட்சிகாண விழைகிறார், கல்வி வளர்ப்பது, அறியாமையைப் போக்குவது, பாழ் செய்யும் மூடப் பழக்கங்களை அடியோடொழிப்பது, பெண்ணுரிமை வேண்டுவது விதவை துயர்தீர்ப்பது, தீண்டாமை ஒழிப்பது. இவை போன்ற பல சீர்திருத்தங்களைக் காண விரும்புகிறார். ஆனால் நாம் அவைகளைச் சிந்திப்பதில்லை, சிலர் சமூக மகாநாடுகளில் மேடை மீது ஏறிப் பேசுகின்றவரை, பெருத்த உணர்ச்சிதான்? அப்புறம் அவை எல்லாம் வீழ்ச்சியே? இவைதான் நாம் இன்றுவரை கண்ட பயன். பொதுவாக ஒவ்வொரு சமூகமும், முன்னேற்றப் பாதையில், முனைந்து செல்லவேண்டுமானால் எம்மக்களாலும் இனிதே போற்றப்படத்தக்க முறையில் முன்னிற்க வேண்டுமானால், முதலில் கெட்ட எண்ணம் ஒழிதல் வேண்டும். நல்ல எண்ணத்தால்தான் உயர முடியும், சிறந்த சீர்திருத்தங்களைக் காணமுடியும், உயர்ந்த எண்ணம் ஒவ்வொருவருக்கும், உள்ளத்திலே உண்டாக வேண்டும், அந்த உயர்ந்த எண்ணத்திலே, சமூக உணர்ச்சியும், சமூக ஆர்வமும் பொங்கி யெழுதல்வேண்டும்.

உயர்ந்தவனாயினும் சரி, தாழ்ந்தவனாயினும் சரி, அறிவுள்ளவனாயினும் சரி, அறிவற்றவனாயினும் சரி, செல்வனாயினும் சரி, வறியவனாயினும் சரி எல்லோர்க்கும் ஏக நீதியே வேண்டும். தன் இன மக்களைத் தானே இழிவு செய்யும் மனப்பான்மை அறவே ஒழியவேண்டும். அவன் நமக்கு அடிமை, அவனை நாம் எது வேண்டுமாயினும் செய்யலாம், என்ற அகம்பாவ மனப்பான்மை அறவே மாறுதல்வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுவதுதான் உயர்ந்த எண்ணத்திற்கு அறிகுறி, முன்னேற்றத்திற்குத் திறவுகோல், அப்படி இல்லாத வரையில் எந்தச் சீர்திருத்தமும், ஏற்ற நற்பயனைத் தரப்போவதில்லை. "எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும்" என்ற எண்ணம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடி கொள்ளும் நாள் என்னாளோ?

'கோவை முரசு' பொங்கல் மலர்

வெளி வருகிறது டெம்மி ¼ சயிஸ் விலை ரூ. 1-0-0

(கவியரசர் பாரதிதாசன்)

பெண்கள் கடன்.

மேகலையும் நற்சிலம்பும் பூண்டு—பெண்ணே
வீழ்ச்சியும் சூழ்ச்சியும் தாண்டு!
போகவில்லை அகம்புறமும், நாலிரண்டும் நெஞ்சம்
புகுந்தோறும் புகுந்தோறும் அறம் எதிரிற் கொஞ்சும்

மேகலையும் ...

தமிழ்காத்து, நாட்டினைக் காப்பாய்—பெண்ணே
தமிழரின் மேன்மையைக் காப்பாய்!
தமிழகம் நம்மதென் ஆர்ப்பாய்
தடையினைக் காலினால் தேய்ப்பாய்
கமழும் சோலையும், ஆறும் நற்குன்றமும் கொண்டாய்
தமிழர் மரபினை உன்னுயிர், என்பதைக் கண்டாய்,

மேகலையும் ......

மூவேந்தர் கொடிகண்ட வானம்—இன்று
முற்றிலும் காண்கிலாய் எனும்
ஓஓ எனப்பகை தானும்
ஓடவே காத்திடுக மானம்
காவெலாம் தென்றலும்
பூக்களும் விளையாடும் நாட்டில்
கதலியும் செந்நெலும்
பயனைப் புரித்த மணி வீட்டில்

மேகலையும் ....



மணமகன் R. K. சுப்பிரமணியம். மணமகள் N. R. லட்சுமி.

பிரபல திருமணம்.

கோவை ஜில்லாவிலுள்ள முக்கியப் பிரமுகர்களில் ஒருவரும், பெரு நிலக் கிழவரும், பிரபல பஞ்சு வர்த்தகரும், சென்னிமலே தேவஸ்தான மேனேஜிங் டிரஸ்டியும், இயற்கையிலேயே மிகுந்த செல்வாக்குமுள்ள வருமான ஈங்கூர், திரு. ஈ. ஆர். கந்தசாமிக் கவுண்டர் அவர்களின் குமாரர். திரு. ஆர். கே. சுப்ரமண்யத்திற்கும், கந்தேகவுண்டன் சாவடி பிரபல மிராஸ்தாரர் திரு. என். ராமசாமிக் கவுண்டர் அவர்களின் புதல்வி திருமதி லட்சுமிக்கும் ஆகஸ்ட்டு மாதம் 28-ம் நடைபெற்ற திருமண வைபவம் காலே 9-30 மணிக்கு விடுதியிலிருந்து இரட்டைக் குதிரை பூட்டிய சாரட் வண்டியில் மணமகன் அமர்ந்து, பெரிய மேளம், பாண்டு வாத்தியங்கள் முழங்க, யானேகள் அலங்கரிக்கப் பெற்று முன் செல்ல, மணமகள் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டது. நூதன முறையில் எலக்ட்ரிக் வேலேப்பாடுகள் அமைந்த கொட்டகையில் மணமக்கள் அமர்ந்து திருமணம் வெகு சிறப்பாக நடை பெற்றது. திருமணத்தை வாழ்த்தி ஏராளமான தந்திகளும், கடிதங்களும் வாசிக்கப்பட்டன. விலேயுயர்ந்த பெருமிதமான சன்மானங்கள் மணமக்களுக்கு பரிசாக வழங்கப்பட்டன. கோவை திரு. ஆறுமுகம் பிள்ளே வாழ்த்து வழங்கினுர்கள். சிறந்த முறையில் உணவளிக்கப்பட்டது.

மாலே ஆங்கில முறையிலும், இந்திய முறையிலும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. சிற்றுண்டி வழங்கப்பெற்ற பின்னர் திருவனந்தபுரம் சகோதரிகள், திருமதிகள் இந்திரா, காமாட்சி பார்ட்டியாரால் பரத நாட்டியக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்கு வந்திருந்தவர்களில் சில முக்கியமானவர்களேக் குறிப்பிடுவது நல்லது திருவாளர்கள் வி. சி. வெள்ளிங்கிரிக் கவுண்டர் அவர்கள், அங்கப்ப செட்டியார், நஞ்சப்ப கவுண்டர், வி. கோபால்நாயுடு, வி. ரங்கசாமி நாயுடு, ஆர். வி. லட்சுமைய நாயுடு, ரத்தினசபாபதிக் கவுண்டர், நல்ல சேனுதிபதி, சர்க்கரை மன்ருடியார், (பழைய கோட்டை பட்டக்காரர்) பி. ஏ. ராஜு செட்டியார். எஸ். ஆர். சுப்ரமண்யம் (திருப்பூர்) சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், குருசாமி நாயுடு, (பெதப்பம்பட்டி) ஜி. டி. நாயுடு, ஏ. எஸ். ஏ. ஆர். அருணுசலஞ் செட்டியார் (ஜெமீன்தார் தேவக்கோட்டை) ஆறுமுகம் பிள்ளே. (கோவை) பல ஆங்கிலேயர்களும், கோவை ஜில்லாவிலுள்ள எல்லா மில் ஏஜண்டுகளும், மேனேஜர்களும், பல வழக்கறிஞர்களும், மற்றும் பலரும், திருப்பூர் பிரபலஸ்தர்களும் ஏராளமாக வந்திருந்து மணமக்களே ஆசீர்வதித்தார்கள். திருமணம் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. எல்லோருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு, திருமணம் இனிது நடைபெற்றது.

உலகியலும் மக்கட் பண்பும்

(நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் M. A., B. L.,)

நிலைமை கூறி, உலக வாழ்வை வெறுத் திகழவைப்பது தமிழற மன்று; வைதிக ஆரிய மதமுமில்லை உலகியற்றிய இறைவன் வாலறிவன். மக்களை உலகில் வாழப் படைத்த இறைவன் அற ஆழி அந்தணன். உலகு உயிர்களால் வெறுத்தற்குரியதாயின், "அருளுடை அந்தணன்" மக்களை இத்தகைய உலகில் வாழப் படைத்திருக்கமாட்டான். அப்படிப் படைப்பது அவன் அன்புக்கும் அறிவுக்கும் சாலாது. அதனால் உலக வாழ்வை அறனாற்றி மூத்த அறிவுடையார் அறக் கடவுள் அருள் திறத்தை மறவாமல் அவருலகை இகழாமல் துய்த்துப் பயன்படுத்த முயல்வர். துறவே மறுமை நலமடையும் வழி எனும் கொள்கையும், ஆன்ற பழந் தமிழ்ச் சான்றோர்க்கு உடன்பாடில்லை. அது அமணர் மதம். பிற்காலப் பார்ப்பனரும் அவர் வழியைப் பின்பற்றும் சுத்தாத்துவித வைதிக சித்தாந்த வித்தகரும், பெண்களை வெறுத்து துறவோடு வீடு அவர்க்கு மறுத்து துறந்த ஆடவர்க்கு மட்டும் முத்தியும் பேரின்பமும் தனி உரிமைச் சொத்தாக்கத் தொடங்கினர். தமிழர் பெண்டிர்க்குப் பெரு மதிப்பும் சரி உரிமையும் வழங்கினர். துறவைத் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரின் தன்னல மறுப்புக்குப் பொருத்தமென்றும், மனை அறமே மக்களுக்கு மாண்பனைத்தும் வழங்குமென்றும் துணிந்து நின்றார்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றில் (துறவு மார்க்கத்தில்) போஒய்ப் பெறுவது எவன்?"

என்ற வள்ளுவர் குறளும் தமிழர் மதத்தை வற்புறுத்தும். அதுமட்டோ! நல்ல இல்லறம் துறவுக்கு மேலெனவும் கொண்டவர் பண்டைத் தமிழர்.

''ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து'
''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

இக்குறள்கள், துறவுக்கு மனையறத்தின் மாட்சி மிக்கதெனும் தமிழறிஞர் கருத்தை விளக்கும் பொய்யில் புலவர் பொருளுரைகள். ''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'' எனத் தேற்றேகாரத்தால், துறவினும் இல்வாழ்வே சிறந்ததெனத் தெளிந்த வள்ளுவப் பேரறிஞர் தான் துறவாமல் மனையறம் நடத்தி அவ்வுண்மையைத் தம் வாழ்க்கையாலும் வலியுறுத்தினர். வாழ்க்கையின் நோக்கம், தன் கடனும் பிறர் நலமும் பேணுவதாம். அதுவே தமிழர் வாழ்க்கை அறம்'' அவ்வறத்தை மக்கள் ஒல்லும் வாயெல்லாம் ஓவாது செயல்வேண்டும். துறந்தாரும் அறம் புரியும் கடனுடையார். தம் கடன்கள் துறப்பார் தவத்தியல் அறியார்.

''தவம்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட் பட்டு''

என்பது தமிழ்மறை. தன்னலம் நீப்பதே துறவாகுமல்லது, அறன் துறந்து கடன் கழிக்க விரும்புதல் கயவரியல்.

இனி, மக்களை மாக்களினின்றும் பிரித்துயர்த்தும் சிறப்பியல்பற்றியும், தமிழர் கொள்கை பிற நாகரிக மாந்தர் மதங்களின் வேறுபட்டது. பேச்சுத் திறனும், கூர்த்த மதியும் மக்கட் பண்பாகா. பிற உயிரினங்களிடையும் இப்பண்புகளைப் பார்க்கிறோம். பழி விலக்கி ஒழுகுவதொன்றே மாந்தர் சிறப்பியல்பு என்பது தமிழறிஞர் கண்ட உண்மை. ஒழுக்கம் உயர்ந்ததென்பது எல்லா இனத்திலர்க்கும் உடன்பாடே. எனினும், அது ஒன்றே மக்கட் பண்பு என்பர் தமிழர். ஒழுக்கறத்தின் வழுக்குவது மக்களை விலங்கினத்தில் மலங்கவிடும் பழி என்று அஞ்சுவர் தமிழறிஞர். "ஒழுக்கம், உயிரினும் ஓம்பப்படும்", "இழுக்கம் (மக்களின்) இழிந்த பிறப்பாய்விடும்" என்பர் தமிழ்ச் சான்றோர்.

தமிழில் திணை என்பது ஒழுக்கம். அஃதுடையார் மட்டுமே மக்கட் பிறப்பினர்; அஃதிலார் மக்கள் உரு அமைந்த 'கயவர்' என்னும் இரு கால் மக்களாவர்.

"உறுப்பொத்தல் மக்கள் ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"

அவ்வொழுக்கறப் பண்புத் திறனே மக்கட் பண்பு. மதி நுட்பம் பல உயிரினத்தின் பொது உடைமை; அதனலது தனிச் சிறப்பாம், மக்கட் பண்பாகாது.

''அரம்போலுங் கூர்மைய ரேனும், மரம்போல்வர்
மக்கட்பண் பில்லாதவர்''

உயிர் எல்லார்க்கும் வெல்லமாகும்; அதை இழப்பது பொல்லாத துன்பமாகும். மாந்தர்க்குச் ''சாதலின் இன்னாததிலலை'' அதனல் உயிரோம்பமானமும் ஏனைய எதனையும் இழப்பது தருமம் என வட அறநூல் பேசக் கேட்போம் தமிழரோ, ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' எனவும்,

''மருந்தோமற்(று) ஊனோம்பும் வாழ்க்கை பெருந்-
பீடழிய வந்த விடத்து'' [தகைமை

எனவும், மக்கள் உயிர் நீர்ப்பர் மானம் வரின்'' எனவும் வற்புறுத்துவர். ஒழுக்கப் பண்புடையவர் மட்டுமே மக்கள். அம்மக்களைச் சுட்டும் சொற்கள் மட்டுமே உயர்திணை எனப்படும். மற்ற மக்களுருவுடைய கயவரும், ஒழுக்க வரம்போம்பாமல், விரும்பியபடி நடக்கும் தேவரும், ஒழுகத்திற்கிடமற்ற பிற உயிருள்ளவும் இவ்வுலகமாயவை அனைத்தையும் குறிக்கும் சொல் எல்லாம் ஒழுக்கம் அல்லாத ''அல்''திணை வகுப்பினமாம் என்று பழந் தமிழ அறிஞர் தம் மொழியிலக்கண நூலில் வரை அறுத்து விளக்கி உள்ளார்.

''உயர்திணை என்மனர் மக்கட் சுட்டே,
அல்திணை என்மனர் அவரல பிறவே''

என்று தமிழ் மரபு உணர்ந்த தொல்காப்பியர் கூற்றாலும் இவ்வுண்மை விளங்கும்.

எனவே, உலக வாழ்க்கை நன்மக்கள் வெறுத்தற்குரித்தில்லாத அறமாண்பும் பிற பயனும் உடையதென்பதும், அவ்வாழ்க்கை அற ஒழுக்கத்திற் பிறழாதமைத்தல்வேண்டும் என்பதும், மானம் பேணிப் பழுபஞ்சும் ''நாணுடைமை மாந்தர் சிறப்பு'' என்பதும் பழைய தமிழர் மேற்கொண்டு கையாண்ட கொள்கைகள் என்பதும் விளக்கமாகும்.

(த. தென்றல்)

இந்தியை நுழைப்பதனல் தமிழுக்கு எந்த நன்மையும் ஏற்படாது; அவர்களுடைய மொழியும் கலா சாரமும் பாழாக்கப்படுவது நிச்சயம்.

ச. சோமசுந்தர பாரதியார் எம் ஏ பி. எல்.

ஜாதி முறை

★

K. A. P. விஸ்வநாதம்

இந்நாட்டில் நடைபெறும கலகங்களுக்கும், குழப்பங்களுக்கும் ஜாதி முறையே பெரிதும் காரணமாக இருந்து வருகிறது. முடிவாகக் கூறவேண்டுமானல் சமூகம் என்னும நிலத்தில் சாதி என்னும் விதையூன்றி வெறுப்பு நீர் பாய்ச்சி வேற்றுமை செடி வளர்ந்து, பொருமை பூத்து, கலகம் காய்ந்து அடிதடி பழுக்கிறது என்றே கூறவேண்டும்.

ஜாதி வேற்றுமையாவது நாட்டு வேற்றுமையைவிட, மத வேற்றுமையைவிட, மொழி வேற்றுமையைவிட, நிற வேற்றுமையைவிட மிகப் பெரிதாக மதிக்கப்பெற்று வருகிறது. ஐரோப்பியர், அமெரிக்கர், சைனக்காரர், ஜப்பானியர் ஆகியவர்கள் வேற்று நாட்டாராயிருந்தும், வேற்று மதத்தினராயிருந்தும், வேற்று மொழியினராயிருந்தும், வேற்று

நிறத்தினராயிருந்தும் அன்போடு கைலாகு கொடுத்து மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். ஆனால், நமது நாட்டினரை நமது மதத்தினரை, நமது மொழியினரை, நமது நிறத்தினரை நாம் தொடவும் அஞ்சி, மறுத்து, வெறுத்து வருகிறோம். இக் கொடுஞ்செயலைச் செய்கின்ற ஜாதி முறையை என்னும் பொழுது அறிஞர்களில் உள்ளம் வெடிக்காது என் செய்யும்?

ஜாதி முறையில் தீண்டாமை என்னும் ஒன்று உண்டு. இதைவிட கடுமையானதும், கொடுமையானதும் இவ்வுலகில் எப்பாகத்திலுமில்லை. தீண்டாமை என்ற சொல்லில் முதல் எழுத்து 'தீ' முடிவெழுத்து 'மை' ஆகவே அச் சொல்லி லேயே தீமை அமைந்திருக்கிறது. தீண்டாமை நெருப்பை விடக் கொடியதாகும். நெருப்பு தொட்டவனை மட்டுமே சுடும். நெருப்பைத் தொட்டவனைத் தொட்டால் சூடு தாக்காது. ஆனால் ஜாதி முறை வகுத்துள்ள தீண்டலானது தொட்டவனைத் தொட்டாலும் தாக்கும், பிறகு அவனைத் தொட்டவனைத் தொட்டாலும் தாக்கும். மனிதனை மலத்தி லும் கேடானதாக மதிக்கச் செய்வது தீண்டாமையேயாகும். மலத்தைத் தொட்டவன் கையைக் கழுவிட்டாற்போதும் மனிதனைத் தொட்டவன் தலையிலிருந்து கால்வரை கழுவி தலை முழுகித் தீரவேண்டும்.

ஜாதி முறையுள் வேண்டாமையும் ஒன்றுண்டு. அது 'நாய் நுழையும் வீட்டில் கூட நீ நுழையவேண்டாம்' 'நாலு கழுதை நடக்கும் தெருவில் நீ நடக்கவேண்டாம்' எனச் சொல்லும், ஜாதி முறையுள் 'பாராமை' என்றும் ஒன்றுண்டு. அது 'பூனை குடித்த எச்சல் பாலைக் குடி, ஆனால் மனிதன் பார்த்த பாலைமட்டும் குடிக்காதே' எனச் சொல்லிச் சொல்லி சிரிக்கும். இன்னும் கொள்ளாமை, கொடுக்காமை, உண்ணாமை தின்னாமை, எண்ணாமை, இரங்காமை பொறாமை முதலிய எத்தனையோ ஆமைகள் ஜாதி முறைச் சேற்றில் வாழ்கின்றன. இந்த ஆமைகள் யாவும் உணராமைக் கிணற்றி லுள்ள அறியாமையின் குட்டிகள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குள் நடைபெற்ற விருந்தொன்றில் நெய் பரிமாறினார்கள் என்ற குற்றத்திற்காக விருந் துண்ட உறவினர்களெல்லாம் ஜாதி இந்துக்களால் அடியும் மிதியும், உதையும் பட்டனர், இக் கொடுஞ் செயல் நடை பெற்ற நாள் 1936, ஏப்ரல் முதல் தேதியாகும். தண்ணீர் எடுக்க மண் குடத்தைப் பயன்படுத்தாமல், பித்தளைக்

குடத்தை பயன் படுத்திய குற்றத்திற்காக பெண் மக்கள் பலர் துன்புறுத்தப்பட்டனர். இக் கொடுஞ்செயல் நடைபெற்றது 1935 நவம்பர் முதலியாகும். இரவிக்கை அணிந்த காரணத்திற்காக தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு ஜாதிமுறை அடி வாங்கிக் கொடுத்திருக்கிறது.

சமீப காலத்தில் ராமது ஜில்லாவில், குளித்தலை தாலுகாவில் ஒரு ஜாதியினரே வசிக்கும் ஒரு தெருவில், மற்றொரு ஜாதியினர் வீடு வாங்கியது செல்லாது என கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வாறு ஜாதி முறை செய்கின்ற கொடுமைகள் அளவிட்டுக் கூறமுடியாதவையாகும்.

ஒரு ஜாதியின் மீது ஆதிக்கம் செலுத்த இன்னொரு ஜாதிக்கு உரிமை உண்டு, என்று கூறுகிறவர்கள் ஒரு நாட்டின் மீது ஆதிக்கம்செலுத்த மற்றொரு நாட்டுக்கும் உரிமையுண்டு என்று எண்ணி சும்மா இருந்துவிடவேண்டும். ஒரு நாட்டை அடிமைப்படுத்த இன்னொரு நாட்டிற்கு உரிமையில்லை என்று கூறுகிறவர்கள் ஒரு ஜாதியை அடிமைப்படுத்த இன்னொரு ஜாதிக்கு உரிமையில்லை என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டுமல்லவா?

பொருளாதாரத் துறையிற் பார்த்தாலும் ஜாதி முறை தீமை செய்துவருகிறது. ஜாதியோடு தொழிலும் இணைக்கப்பெற்றிருக்கிறது. பிறப்பினாலேயே ஒருவனது தொழில் முன்னதாகவே உறுதி செய்யப்பட்டுவிடுகிறது. இதனால், குறிப்பிட்ட சில ஜாதியினர் வேறு தொழில் செய்து பொருளாதாரத் துறையில் சிறப்படைந்து வாழமுடிவதில்லை.

நல் வாழ்வு வாழ்வதற்குக்கூட ஜாதி முறை தீமை செய்துவருகிறது. எடுத்துக்காட்டாக பிராமணர்களையே எடுத்துக்கொள்வோம். நால்வகைச் சாதியில் இவர்கள் தலை சிறந்தவர்கள். இந்த ஒரு சாதியில் அய்யர், அய்யங்கார், சர்மா, சாஸ்திரி என்பது போன்று வட நாட்டிலும் தென் நாட்டிலும் சேர்ந்து பெரும் பிரிவுகள் 56-ம், உட் பிரிவுகள் 224ம், உட் பிரிவுகளின் உட் பிரிவுகள் 896ம் இருக்கின்றன, என்பதை அறியும்பொழுது 'வாழ்வு' எவ்வளவு தூரம் ஒதுக்கப்பெற்றிருக்கிறது என்பதை நன்கறியலாம். ஜாதி முறையும், கோத்திரப் பிரிவும் பார்த்து மணம் செய்வது என்ற கொள்கையினால் அழகான ஆணும், பெண்ணும், அல்லது அறிவாளிகளான ஆணும் பெண்ணும் சேர்ந்து நல்

வாழ்வு நடத்த முடிவதில்லை. ஆனது ஒன்றையும், ஆகாதது ஒன்றையும் இணைத்து அவர்களில் வாழ்க்கை முறையை ஜாதிமுறை வேடிக்கைப் பார்த்து வருகிறது.

ஜாதி முறை நல்லதா? கெட்டதா? என்பதும் ஒரு கேள்விதான் இதற்கு பதில் கூறுமுன் எதற்கு? என்று கேட்டுத்தான் பதில்கூறவேண்டும். ஜாதி முறை சில ஜாதிக்கு நன்மையாகத் தோன்றலாம். அதுவும் கானல் நீர்தான். சில ஜாதிக்கு ஜாதிமுறை தீமை செய்துவருகிறது. சுய நலத்தைத் கருதாமல் நாட்டில் பொது நலத்தைக் கருதும்பொழுது ஜாதிமுறை தீமை தரும் என்றே கூறவேண்டும்.

சமூக ஒற்றுமையின் மீதுதான் இந்நாட்டில் ஒரு வலுவான அரசியலை அமைக்கமுடியும் பிளவுபட்ட மக்களால் ஒரு நல்ல அரசியலை அமைக்க முடியாது. இவ்வுண்மையை உணர்ந்த அரசியல் நிபுணர்கள் சமூக சீர்திருத்தத் தலைவர்கள், தேசியத் தலைவர்கள் அறிஞர்கள், விஞ்ஞானிகள் ஆகிய அனைவரும் நம் நாட்டின் எதிர்கால நலனைக் கருதிய சமூக ஒற்றுமைக்கு ஜாதிமுறை அழியவேண்டும் என்றே கூறுகிறார்கள்.

'ஜாதி இரண்டொழிய வேறில்லை' அது 'இட்டார் பெரியார் இடாதார் இழி குலத்தார்' என்பதுதான் என்றும், ஒழுக்கமுள்ளோர் அனைவரும் ஒன்றே என்ற பொருளில் 'ஒன்றே குலமும்' என்றும், எல்லாம் எனது ஊர், எல்லோரும் எனது சுற்றத்தார் என்ற பொருளில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் பழந்தமிழ் நூல்களில் அரும் புலவர்கள் பலர் ஜாதி முறையை வெறுத்துக் கூறியிருக்கின்றனர்.

அது மட்டுமா? வேதாந்தக் கருத்தை விளக்கிய விவேகானந்த சுவாமிகளும், சித்தாந்தக் கருத்தை விளக்கிய இராமலிங்க சுவாமிகளும் ஜாதிமுறை ஒழியவேண்டும் என்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர். அவ்வளவோடு நின்றுவிடவில்லை. எல்லா ஜாதியினரும் நாயன்மார்களாகியிருக்கிறார்கள் என்று சைவ புராணம் கூறுகிறது. அதைப் போலவே எல்லா ஜாதியினரும் ஆழ்வார்களாகி யிருக்கிறார்கள் என்று வைணவ புராணமும் கூறுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக தீண்டாமை அழியவும், ஜாதி முறை ஒழியவும் தெய்வ சம்மதமும் இருக்கிறது என்று புராண வரலாறுகளால் தெரிய வருகிறது. தீண்டாத ஜாதி, திருப்பாணாழ்வாரை திருவரங்கப் பெருமாளும், திருநாளைப் போவார் நந்தனாரை தில்லை நடராஜப் பெருமாளும் திருமேனியோடு தழுவி தன்னுள் இரண்டறக் கலக்கும் படிச் செய்த அருட் செயல்தான் அது. இனி என்ன விவாதம் இருக்கிறது ? ஒன்றுமில்லை.

ஜாதி முறையை ஒழிக்க 5 வழிகளிருக்கின்றன. முதலாவது ஜாதி முறையை வெறுக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இரண்டாவது பெயருக்குப் பின்னால் உள்ள பட்டப் பெயர்களைவிடவேண்டும். மூன்றாவது எல்லோரிடமும் அன்பாய்ப் பழகவேண்டும். நான்காவது சுத்தமாக இருக்கும் எவரோடும் எவ்விடத்தும் மகிழ்ச்சியோடு உணபது. 5 வது கலப்பு மணம் செய்வது. இந்த 5 வழிகளாலும் ஜாதி முறையை ஒழிக்க இப்போது சிறிய அளவில் முயற்சிக்கப்பெற்று ஒருவாறு பலனும் அடைந்துவருகிறது. கலப்பு மணத்தை ஆதரித்தும், நடத்தியும், நடத்தத் தூண்டியும் எழுதியும் பேசியும் வருகிறவர்களின் தொகை அதிகமாகிவருகிறது. ஜாதிக் கலப்பு மட்டுமல்ல, சமயக் கலப்பு, மொழிக் கலப்பு மாகாண கலப்பு, தேசக் கலப்பு, நிறக் கலப்பு திருமணங்கள் கூட நடைபெற தொடங்கிவிட்டன. பள்ளிகளில் படிக்கமுடியாமை, பஸ்களில் ஏற முடியாமை முதலியவைகள் அழிந்து ஒழிந்து வருகின்றன. ஜஸ்டிஸ் கட்சி தாழ்த்தப்பட்டவர்களை ஸ்தல ஸ்தாபனங்களில் உட்காரவைத்து பெருமைப்படுத்தியது. காங்கிரஸ்கட்சி தாழ்த்தப்பட்டவரை சட்டசபையில் தலைமைப் பதவியில் உட்கார வைத்து மற்ற ஜாதியினரை மரியாதை செய்யச் செய்துவிட்டது. ஜாதி முறையும் அழியத் தொடங்கிவிட்டது. இனி எவராலும் அதைத் தடுத்து நிலை நிறுத்த முடியாது. நீங்களும் அது அழியவேண்டும் என ஆசைப்படுங்கள், இன்றேல் சும்மா இருந்துவிடுங்கள். அது அழியும் வேகத்தில் குறுக்கே செல்லாதீர்கள். அதுவே நீங்கள் இந் நாட்டில் எதிர்கால நன்மையைக் கருதிச் செய்யும் பெருந் தொண்டாகும் எனக்கூறுவதோடு எனது பேச்சை முடிக்கிறேன்.

(வானொலி நிலையத்தார் அனுமதியுடன் வெளியிடப்பட்டது)

ஆராய்ச்சி உரை.

வெளிநாட்டு உதவி தேவையா?

விஞ்ஞான விற்பன்னர் தோழர் G. D. நாயுடு அவர்கள்

அந்நியர்களின் உதவி இனிமேல் நமக்கு வேண்டுமா என்பது பற்றிப் பல்வேறு அபிப்பிராயங்கள் வெளிவரலாம். நம் தேசம் இப்பொழுதிருக்கும் நிலைமையில் வெளிநாட்டு உதவியும், வெளிநாட்டு நிபுணர்கள் உதவியும்கட்டாயம் வேண்டுமென்பதேதான் எனது அபிப்பிராயம் அந்நியர் அதிகாரத்தில் இருக்கும் பொழுது அவர்கள் நலனைத்தான் முதலில் கவனிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அந்நிய அரசாங்கத்தை வெளியேற்றுவதில் நாம் ஒருவாறு வெற்றியடைந்துவிட்டோம். ஆனால் அந்நிய அரசாங்கம் வீற்றிருந்தபொழுது நமக்கு வேண்டியவற்றை அவர்கள் கொடுப்பதிலே அல்லது நாம் எடுத்துக்கொள்வதிலே மிகப்பல தவறுதல்கள் நடந்தேறி விட்டன. இனி கடந்துபோன முறைகளையும் தவறுகளையும் பற்றி நினைத்துக் கொண்டும், பிரசங்கங்கள் செய்து கொண்டும், பழைய சரித்திரங்களைப் படித்துககொண்டும் இருப்பதில் பயனில்லை. காலப்போக்கை நம் விருப்பப்படி நமக்குப் பின்னால் இழுத்துக் கொண்டு போகும் சக்தி நமக்கில்லை. ஆனால், அதே சக்தி ஓரளவாவது மற்ற நாடுகள் பலவற்றிற்கும் இருக்கிறது. இப்பொழுது குறைந்தது காலப்போக்கைப் பின் தொடர்ந்தாவது நாம் முன்னேற்றமடையாவிடின் நிகழ் காலத்தில் நாம் யாவரும் மற்றவர்களுக்கோ அல்லது நமக்குள் ஒருவருக்கொருவராகவோ மேலும் அடிமைகளாக இருக்கவேண்டி நேரிடும்.

தற்சமயத்தில் தேசிய அரசாங்கம் அமைத்துவிட்டதானது ஓரளவு சந்தோஷம் தரக்கூடியதாயினும் இந்த தேசிய அரசாங்கம் பத்துப்பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக அதாவது ஒவ்வொரு காரியமும் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்துகொண்டிருந்த காலத்தில் நமக்குக் கிடைத்திருக்கவேண்டியது தவறி நம்மிடமிருந்த சில பொருத்தமில்லாத கொள்கைகளால் இதுவரை வீண் காலதாமதம் ஏற்பட்டு, எப்பொழுதுமே கண்டிராத வண்ணம் மிக மோசமானதும் மிகப் பொல்லாததுமான நிலைமையில் நம் தேசம் இருக்கும் பொழுது நம் தேசிய அரசாங்கம் என்னும் சுமை நம்மையடைந்திருக்கிறது, இந்த நிலையை நினைத்தாலே பயமாயிருக்கிறது. ஆனால் எந்தக் காலத்திலும் கெட்ட எண்ணங்களோடு சேர்ந்த பயங்காளித்தனத்தைக் கையாள்வது முற்றிலும் கேடு விளைவிக்கத்தான் செய்யும். எனவே, நேர்மையானவழியில் தைரியத்தோடு, தேசிய அரசாங்கத்தை நடத்துவதுதான் புத்திசாலித்தனமாகும்.

பல்வேறு முறைகளால்நாம் தேசிய அரசாங்கம் எனும் வெற்றியைக் கண்டுவிட்டோம். இந்த வெற்றிக்கு மூலகாரணமாயிருப்பவர்கள் எவரா

யிருப்பினும் பாராட்டத்தக்கவர்தாம் வெற்றிக்குப் பின் எப்பொழுதும் கண்டிராத அளவு மோசமான நிலை யில் இருக்கின்ற இந்தத் தேசத்தின் பாரம் இவ்வளவு என்பதையும் இனி மேல் இந்தப் பாரத்தை சுமப்பது எப்படி என்பதையும் அறிந்து கொள்ளக்கூடிய அறிவோ, சக்தியோ நம்மிடம் எவ்வளவு இருக்கிறது என் பதை அறியாத பலர் பலவாறு பேசிக் கொண்டிருப்பதைத் தினமும் பார்க் கிறோம். மேலும் இப்பொழுது சிறிது காலமாக என்ன நடந்துகொண்டி ருக்கிறது என்பதைப் பார்க்கும் போது வயிறுதான் எரிகிறது. எங்கு நோக்கினும் லஞ்சப்பேய் தலைவிரித் துத் தாண்டவமாடுகிறது, தொழிலா ளர் தொல்லைகள் நிகழ்ந்தவண்ண மிருக்கின்றன. முதலாளிகள் கொள்ளையடித்த வண்ணமிருக்கின்ற னர்.

அதிகாரத்திலுள்ளவர்கள் 'லஞ்சப் பேயை ஒழித்துவிடுவோம், முதலாளி களை நசுக்கிவிடுவோம், தொழிலா ளரை உயர்த்திவிடுவோம், பொது ஜன அமைதியை நிலைநாட்டுவோம்' என்றும் எதையும் சோஷியலிசம், நேஷனலிசம் செய்து விடுவோம், என்று சொல்லிக்கொண்டே யிருக்கி றார்கள். ஆனால் உண்மையில் நாட் டில் நடப்பது என்ன? சோஷியலி சம், நேஷனலிசம் என்பதான போர் வையின்கீழ், ஒரு புறம் தொழில் களில் ஊக்கம் குறைவதையும் வேறொருபுறம் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி விடுகி றோமென்று சம்பளப் புள்ளிகளை உயர்த்தி விட்டாலும், உணவுப் பொருள்களின் விலையேற்றத்தாலும், பிளாக் மார்க்கெட்டில் லஞ்சப்பேய்த் தாண்டவமாடுவதாலும், அவர்களின் வாழ்க்கைத் தரம் கீழ் நோக்கிப் போய்க்கொண்டிருப்பதையும், பிறி தொருபுறம் கொள்ளை லாபக்காரரிட மிருந்து செல்வம் முழுவதையும் வரி களாக வசூலித்து விடுகிறோமென்று சொல்லி, வரிச் சட்டத்தின்கீழ் அவர் கள் வராதபடி, அவர்கள்மீது ஒரு பைசா வரிகூட விதிப்பதற்கு முடி யாதபடி கொள்ளை லாபக்காரர் மேலும் மேலும் கொள்ளையடித்துக் கொண்டிருப்பதையும் தினமும் நாம் பார்க்கிறோம்.

முன் கூறியவற்றை நான் மட்டும் சொல்லவில்லை. ஆகஸ்ட் 5, 6 தேதி களில் வெளிவந்துள்ள பத்திரிகை களில் பார்த்தால், காங்கிரஸ் அக்கி ராசனர் அவர்களும், ரிசர்வ் பாங்க் கவர்னர் அவர்களும் என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்பது தெரியவரும். அவர்கள் சொல்லியிருப்பதும் ஒன் றும் புதியவையல்ல, எல்லோருக்கும் தெரிந்த, புரிந்த விஷயங்களேயாம். அவர்கள் பேசியதிலிருந்து இப் பொழுது அதிகாரத்திலிருப்பவர்கள் எல்லா விஷயங்களும் அறிந்தவர்கள், எல்லாவற்றையும் சமாளிக்கக்கூடிய சக்தி படைத்தவர்கள் அல்லர் என் பது விளங்குகிறது. எனவே இப் பொழுது இருக்கும் நிலையை மாற்றி பொது க்ஷேமத்தைக் கொண்டுவர செய்யவேண்டுவது யாது, என்பதே இன்றைய பிரச்சினை.

தேசீய அரசாங்க வெற்றிஏற்பட்ட பின் யாரார் எந்த எந்தத் தொழிலில் திறமை வாய்ந்தவர் என்பதை தங்கள் கட்சிக்குள்ளிருந்தேனும் எதிர்க்கட்சி களிலிருந்தேனும் அது அன்றி அந்நி யர்களிலிருந்தேனும் தகுந்த நிபுணர் களைப் பொறுக்கி யெடுத்து அந்த அந்தத் தொழிலில் அமர்த்தி குறை பாடின்றி நடத்துவதுதான் திறமை யாகும். இப்பொழுது இருக்கும் பிரதம மந்திரியானவர் இதே உத்தே சத்தைக்கொண்டுதான் மற்ற கட்சி

களிலிருந்த சில நிபுணர்களைப் பொறுக்கியெடுத்து அதிகாரத்தில் அமர்த்தியிருக்கிறார். இந்தச் செய்கையை சிலர் தங்களுடைய அறியாமையினால் மிக விபரீதமாக எண்ணிக்கொண்டும், பேசிக்கொண்டும் வருகிறார்கள். ஆனால் பெரும்பாலோர் பிரதம மந்திரியானவர் தமது கட்சியின் கீழ்த்தரமான நோக்கங்களுக்கு அடிமையாகிவிடாமல் தமது உயர்ந்த லட்சியத்தைக் காரியத்தில் காட்டியதற்குப் பாராட்டப்படுகிறார்கள். இது தேசிய முன்னேற்றத்தின் ஒரு முதல் படியாகும். மேலும் சில படிகள் இருக்கின்றன. அவற்றுள்சிலவற்றை இங்கு விவரிக்கிறேன்.

விலை வாசிகளைக் குறைக்கவேண்டும்என்றும் விலை கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்றும் ரிசர்வ் பாங்க் கவர்னர் சொன்னதாக பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. விலை வாசிகளைக் குறைக்க வேண்டியது உண்மையே. அவசியமும்கூட, ஆனால் விலை கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டால், பிளாக் மார்க்கட்டில் விலையை மிக உயர்த்தி விற்பனை செய்வதற்கும், லஞ்சப்பேய் தாண்டவமாடுவதற்கும் வழியேற்படுமேயொழிய விலை கட்டுப்பாட்டினால் வேறு எத்தகைய பிரயோசனமும் ஏற்படாது. இதை அனுபவத்தில் பார்க்கிறோம். இதைத் தடுக்க என்ன பரிகாரம்? ஜனங்களுக்கு வேண்டியவற்றை ஏராளமாக உற்பத்தி செய்யப்பட வேண்டும் லஞ்சப் பேய்களை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். மக்களுக்கு வேண்டிய பொருள்களை ஏராளமாக உற்பத்திசெய்யவும் லஞ்சத்தை யொழிக்கவும் நிபுணர்கள் தேவை. விஞ்ஞான சாஸ்திரக் கழகங்களும், இயந்திரத்தொழில் கழகங்களும், விவசாய முன்னேற்றக்கழகங்களும் அவற்றை நடத்துவிக்க ஏராளமான நிபுணர்களும் தேவை. இப்போதிருக்கும் கழகங்கள் பழைய சரித்திரங்களைக் கற்றுக் கொடுக்கும் பின் நோக்கிச் செல்லும் யுனிவர்சிடிகளாகவும், பிரிவினை எனும் பேயை உள்ளே செலுத்தி அதனால் கட்டுண்டு பிரிக்கப்பட்ட தொழில் கூடங்களும், தொழிலாளரும் நிறைந்த காட்சிகளாகவும் இருக்கின்றன. தற்சமயம் நிபுணர்கள் என்று சொல்லப்படுபவர்களில் வெகு சிலர் தவிர மற்றவர்கள் இப்போதிருக்கும் நிலையிலேயே, முறையிலேயே பழகிய காரணத்தால்நீண்ட காலத்திற்கு இதே பழைய முறையே உபயோகிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. நம்முடைய சர்க்கார் இக்குறையை நீக்குவான்வேண்டி அநேக மாணவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி யிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய நல்லெண்ணத்திற்காக அரசாங்கத்தைப் பாராட்டலாமே தவிர, இந்த விஷயத்தில் அரசாங்கம் கையாண்டிருக்கும் முறையைக் கண்டிக்க எவரும் தயங்கமாட்டார். வெளி நாடுகளுக்குப் புதிய புதிய விஷயங்களைக் கற்றுவர அனுப்பப்பட்டிருக்கும் மாணவர்களில் அநேகர் மிக இளவயதினர். அவர்களிற் பெரும்பான்மையோர் நமக்கும், நம் தேசத்திற்கும் வேண்டாத பழக்க வழக்கங்களைத்தான் கற்றுக்கொண்டு வரப்போகிறார்கள். ஏதோ ஒரு சிலர் தப்பித் தவறி மிகுந்த உபயோகமுள்ளவர்களாகத் திரும்பி வரலாம் ஆனால் அபாரமான செலவிற்குத் தகுந்த பிரதிப் பிரயோசனம் நாம் அடையப் போவதில்லை. ஆகவே நம் அரசாங்கம் வெளி நாடுகளிலுள்ள இயந்திரவேலைத் திறத்திலும் விஞ்ஞான வளர்ச்சியிலும் விவசாய முன்னேற்றத்திலும் அரசியலமைப்பிலும் சாமர்த்தியசாலிகளாக விளங்கும் நிபுணர்களை இருமடங்கு மும்மடங்கு

ஊதியம் கொடுத்தாயினும் இந்த நாட்டிற்குத் வரவழைத்து ஆயிரக்கணக்கான நம் இளைஞர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும், பயிற்சி யுண்டாக்கவும் செய்திருக்கலாம்.

இந்த முறையைக் கையாள்வதின் மூலம் மிகக் குறுகிய காலத்தில், குறைந்த செலவில் நம் நாட்டிலேயே நம்மவர்களிலேயே வேண்டிய அளவு நிபுணர்களை உண்டாக்கிவிடலாம். அரசாங்கம் இப்பொழுது கையாண்டிருக்கும் முறையால் ஏற்பட்டிருக்கும் செலவில் ஒரு கால் பாகத்தில் பத்து மடங்கு அதிகமான இளைஞர்களை மிகக் குறைந்த காலத்தில் நிபுணர்களாக உண்டாக்கிவிடலாம்.

இந்தத்துறையில் நாம் ஏன் பிற நாட்டு நிபுணர்களை வரவழைக்க வேண்டும். நாமாக ஏன் ஆரம்பிக்கக்கூடாது, என்று சிலர் கேட்கலாம். நாமே முதலெழுத்திலிருந்து ஆரம்பித்து ஒவ்வொன்றையும் ஆராய்ச்சி செய்து, அவ்வவற்றில் முன்னேற்றமடைந்து பிற நாடுகளுக்கு சமமாக வருவதற்கு அநேக ஆண்டுகள் செல்லும்.

நம் நாட்டிற்கு இப்பொழுது மிகவும் இன்றியமையாதனவாய் மிக அதிகமான அளவில் வேண்டியவை உண்ண உணவும், குடியிருக்க வீடும் ஆகிய இரண்டுமே இப்பொழுதிருக்கும் நிலையில் பல மடங்கு ஊதியம் பெறக்கூடிய வசதியிருந்தும், விவசாயம் நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கொண்டுதான் வந்திருக்கிறது. மேல் நாடுகளைப் போலல்லாது மெஷின்கள் உதவியின்றியே வீடுகளும் மற்ற கட்டிடங்களும் வேண்டிய அளவு குறுகிய காலத்தில் கட்ட முடிந்த சக்தி இன்று எங்குபோய் விட்டதோ தெரியவில்லை. வேலைப்பாட்டுடன் ஒரு கட்டிடம் இப்பொழுது கட்டி முடிப்பதென்றால் வருஷம் ஒன்றிரண்டு ஆகிறது. தொழிலாளியின் வேலைத்திறமை அவ்வளவு தூரம் மழுங்கியிருக்கிறது. ஆனால் தற்காலத்தில் நம் நாட்டில் உணவுப்பொருள்கள் அல்லாத புகையிலையும் பருத்தியும் இன்னும் பணமாகக் கூடிய மற்ற விளை பொருள்கள் தாம் கொஞ்சம் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம் யாதெனின், நம் தேசத்திற்கும் நம் மக்களுக்கும் பொருத்தமில்லாத பாக்டரி சட்டங்களும், தொழில் சட்டங்களும், கிரிமினல் சிவில்ப்ரொஸீஜர்கோட்டுகளும் இருப்பதுவேயாகும். அது மட்டுமல்லாமல் கம்யூனிசம், சோஷியலிசம் என்பவற்றின் போர்வையின்கீழ் யாதொன்று மறியாத தொழிலாளரும், மாணவரும் வீண் சோம்பேறிகளாகவும், வாயாடிகளாகவும் மாற்றப்பட்டிருப்பதுமேயாகும். இவையெல்லாம் சீர்படுத்தப்பட வேண்டாமா? அவ்விதம் சீர்திருத்தம் செய்வதற்கு நாமே முதலிலிருந்து ஆரம்பித்து ஆராய்ச்சி செய்து பல வருடங்களுக்குப் பின் உபயோகத்திற்குக் கொண்டு வருவதா? அது இயலுமா? அப்படியே நம்மால் முடிவதாக இருந்தாலும் அந்தக்காலத்தை யடைவதற்கு முன்னதாகவே நம் நாட்டில் உணவுக்கஷ்டம் குடியிருப்புக் கஷ்டம், பல்வகையான பொருளாதாரக் கஷ்டங்கள் ஆகிய இன்னோரன்ன தொல்லைகள் மிகுதியாகி தேசமே சீர்குலைந்து விடுமென்பது திண்ணம்.

(தொடரும்)

ஓட்டல்களிலே சிறந்தவை பிரியாணி ஓட்டல்,
-: அவைகளில் சிறந்தவை :-
பெங்களூர் பிரியாணி ஓட்டல்
டவர் கிளாக்குக்கு எதிரில் உள்ளது.

எமது நன்றி உரை.



உழவலன் பரும் பெரு நிலக்கிழவரும் எல்லா அரசியல்
கட்சிகளும் அன்னுரை விரும்பும் குணம்
படைத்தவருமாகிய உடுமலைப்பேட்டை

உயர் திரு. M. S. கனகராஜன்

அவர்கள், சமீபத்தில் உடுமலைப்பேட்.டை, நகராண்
மைக்கழகத் தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கு
எமது மனமார்ந்த நன்றியை அன்னுருக்குத்
தெரிவித்துக் கொள்கிறேம்.

ஆசிரியை, S. P. மீனுட்சி அம்மாள்.

சாவிலே வாழ்வு.

(விருதை ந. இராமசாமி)

சுப்பனின் முகத்தில் சோக ரேகை படர்ந்து விரிகிறது. வறுமையின் பிடிப்பு நிறைந்த பசி அவன் வயிற்றைக் கவ்வுகிறது. வயிற்றை பிசைந்து கொடுக்கிறான். வயிற்றுப் பசியின் கொடுமை அவனால் தாளமுடியவில்லை. அவன் மனக்கண்முன் வறுமையில் சிக்கி குமுறி கொந்தளிக்கும் தன் மனைவியும் மகளும் குடிசையிலே குந்திக்கிடக்கும் கோரக் காட்சி தோன்றுகிறது.

சுருங்கிப்போன அவனது முகத்தில் மேலும் சுழிவுகள் தோன்றுகின்றன. எதிர் பார்க்கும் ஏக்கத்தோடு பாதையை நோக்குகிறான். அவன் கண்களில் ஏமாற்றத்தின் பிரதி பலிப்பு! நெஞ்சில் ஏக்கத்தின் பெருமூச்சு! உதட்டில் சோகத்தின் சோபை!

தன் பார்வையை சுடலைமீது செலுத்துகிறான். நேற்று அந்த சுடலையிலே ஓர் பிணம் வெந்தது. இன்னும்கூட எரிந்துபோன அந்த நெருப்பின் வேகம் குறையவில்லை, நீடித்த வெப்பம்தான். ஆனால், இறுதிப் புகை கிளம்பிக் கொண்டிருக்கிறது, வெப்பம் நிறைந்த இந்தப் புகையைப் போல தன் வாழ்வின் இறுதி மூச்சும் நின்றுவிடுமோ என சுப்பன் அஞ்சினான்போலும். முகத்தை சுளித்துக்கொள்கிறான். அவன் வாய் முணுமுணுக்கிறது, உலகத்தை நிந்திக்கிறான் என்பதை அவனது முகபாவம் காட்டுகிறது. இருக்கை கொள்ளாது திணறுகிறான். கோபமும் தாபமும் நிறைந்த தொனியோடு இந்த உலகத்தைப்பார்த்து கேட்கிறான். "இன்னிக்கி இந்த ஊரிலே ஒருத்தர்கூட சாகலையா" என்று!

ஆம்! யாராவது இறக்கவேண்டும் அந்தப் பிணத்தை சுட்டெரிக்க சுடலைக்கு வரவேணடும் பிணத்தை வேக வைத்தால் சுடலைக் காவலன் சுப்பனுக்கு கூலி! இந்த தொழில் மூலம் கிடைக்கும் கூலிதான் சுப்பனின் குடும்பத்துக்கு-சுகபோக வாழ்வுக்கு வேலி! சுடலைக்கு பிணம் வரா விட்டால் அவனது குடும்பத்தில் அன்று பசியும் பட்டினியும் கோர தாண்டவம் புரியும். அது போலவே இன்று ....

இன்றைக்கு அவன் ஜீவனம் எப்படிக் கழியுமோ?

மயங்கிய மாலையில் தவழும் காற்று ஜிலு ஜிலுக்கிறது. மீண்டும் பார்க்கிறான் பாதையை. பசியின் கொடுமை பதிந்த அவனது பார்வையில் சிறிது தெளிவின் உணர்வு தோன்றுகிறது. கடைவாயில் புன்னகை, பின்னர் பெருத்த நகைப்பு வாய்விட்டுச் சிரிக்கிறான்.

ஆம்! தூரத்திலே ஓர் பிணத்தை சுமந்துகொண்டு பலர் வருகிறார்கள். பிணம் வருகிறது; சுடப்போகிறான். கூலி கிடைக்கப்போகிறது. இன்று அவன் குடும்பம் பசி தீர்த்துக்கொள்ளப்போகிறது. இப்படி யிருக்கும்போது சிரிக்காமலிருப்பானா?

பிணத்தை வைத்து விறகு அடிக்கி வைக்காமல் சுற்றி, களிமண் பூசி சிதை கட்டுகிறான் சுப்பன். சடங்கு நடக்கிறது. சுப்பனுக்கு கூலியும் கிடைக்கிறது. வந்தவர் யாவரும் சென்ற பின்பு சிதை யெங்கும் தீயை பரப்புகிறான். நெருப்பு ஜ்வாலைவிட்டு எரிகிறது. தீ பரவியவுடன் முறுக்கு வேகத்தில் பிணம் எழுந்திருக்கிறது. சுப்பன் சிரிக்கிறான். கழி கொண்டு தாக்கிப் பிணத்தைப் படுக்கவைக்கிறான். மீண்டும் சிரிப்பு கொந்தளிக்கிறது அவனுக்கு.

ஆனால்............ அதோ அங்கே.......

ஓர் பெரிய வீடு! அங்கே அழுகுரல்! பெண்ணொருத்தி தாங்கமுடியாத தன் துயரத்தை வெளியிட்டுக் கதறுகிறாள். துடியாய் துடிக்கிறாள், ஐயோவென்று அலறுகிறாள், கூடியிருப்பவர்களின் தேறுதல் மொழி அவளுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. எப்படி அவள் ஆறுதல் அடையமுடியும்?

நேற்று முன்தினம்தான் அவளுக்கு விவாகம். கருத்துக்கிசைந்த காதலனை மணந்தாள்! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினாள் நேற்று. இன்பத்தின் எல்லையைக் கண்டுவிட்டதாக அந்த சுமங்கலி பூரித்தாள். இன்று அமங்கலியாகி தன் ஆராத் துயரத்தை அடக்க முடியாது அவதியுற்று அலறுகிறாள்! அழுகிறாள் முட்டுகிறாள்! மோதுகிறாள்! "இந்நேரம்! என் கணவரின் பிணம் வெந்து சாம்பலாகி இருக்குமே! ஐயோ! என்று கதறுகிறாள்!

ஆனால் சுடலையிலே சுப்பன் சொகுசாகச் சிரிக்கிறான். சடலம் சற்று நேரத்தில் சாம்பலாகிவிடுமென்று! இங்கே சுப்பனுக்கு பூரிப்பு! அங்கே அந்த பெண்ணுக்கு தாங்கமுடியாத துயரம்! இதுதான் உலகத்தின் அமைப்பு! யாராவது இறந்தால் சுப்பனுக்கு வாழ்வு! அதே நேரத்தில் சாகக் கொடுத்த பலருக்கு தாழ்வு! இது சாவிலே வாழ்வு!

தீண்டாமை

அறிஞர் C. N. அண்ணாத்துரை M. A.

தமிழ் நாட்டிலே எங்கு பார்த்தாலும், சிற்பிகளின் சிந்தனையைச் சிறப்புற விளக்கிடும், எழில்மிகுந்த, கோயில்கள் உள்ளன; முடியுடை மூவேந்தர்களும், பல்லவரும் கட்டிய ஆலயங்கள்—அவை ஒவ்வொன்றுக்கும், சிறப்புகள், மகிமைகள், கூறப்பட்டுள்ளன. பாடல்பெற்ற ஸ்தலங்கள் என்று புகழப்படுகின்றன. ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு அற்புதம் கூறப்படுகிறது. தாயுமானார் தயாபரர், தீராத வல்வினையைத் தீர்த்தவர், தில்லையில் திருநடனம் புரிபவர் திருவரங்கத்து அண்ணல் என்று. பெயரிலேயே பொருட் செறிவும் வைத்துப் பேசப்படுகிறது. பாடல் கேட்டுக் கதவு திறக்கப்பட்ட கோயில், படிக்காசு கிடைத்த கோவில், தூது சென்ற தலம் என்று பல்வேறு, மகிமைக் கதைகள் கூறப்படுகின்றன.

அதாவது ஆலயங்கள் ஏராளமாக உள்ளன, அவைகளில் அழகும் மகிமையும் பேசப்படுகின்றன; அங்கு சென்று சேவிப்பது இகபரசுகம்தரும் என்று பேசப்படுகிறது. கோயிலில்லா ஊரிலே குடியிருக்கவேண்டாம் என்பது பழமொழி, திருக்கோயிலை வலம்வராத கால் என்ன காலே. ஐயனைச்

சென்று காணுத கண் என்ன கண்ணே. என்று பஜனைகள் நடக்கின்றன. தூய்மையின் இருப்பிடம், என்று கூறப்படு கிறது. இவ்வளவு கூறிவிட்டு, ஏடுகளை இதற்காகக் குவித்து விட்டு இறைவனின் இல்லங்களை எங்கும் எழுப்பிவிட்டு, அவற்றின் அருமை பெருமை, அங்கு போகவேண்டியதன் அவசியம், போனுல் ஏற்படும பலன், ஆகியவற்றைப் பாட்டாகவும் கூத்தாகவும், படமாகவும் எடுத்துக்காட்டிவிட்டுக் கேட்டதும் மக்களுக்கு, ஓர் ஆவல்-பற்று-பாசம்-ஏற்படும் படி செய்துவிட்டு - ஆசையைத் தட்டி எழுப்பிவிட்டு, வீணையை மீட்டத் தொடங்கியதும், இசை கேட்க வருபவ னின் காதுகளை அடைப்பதுபோல, எழில்மிகு சித்திரத்தைத் தயாரித்துக் காணவாரீர் என்று அனைவரையும் அழைத்துக் காணவரும் சிலரின் கண்களைக் கட்டிவிடுவதுபோல, பழச் சாற்றின் இனிப்பைக் கூறிக்கொண்டு, பருகக் கொஞ்சம் தருக என்று கேட்பவனை விரட்டுவதுபோல-ஆலயங்களுக்கு மகிமையும் மேன்மையும் பலனளிக்கும் சக்தியும் இருப் பதைக் கூறிவிட்டு, அங்கு வரக்கூடாது நுழையக்கூடாது என்று சிலரை அல்ல, ஏறக்குறைய எட்டுக்கோடி மக்களைத் தடுத்து வருகிறோம். இன்று நேற்றல்ல, தலைமுறைத் தலை முறையாக அவர்கள் ஏதோ குற்றம் செய்ததற்குத் தண்ட னையாக அல்லது - அவர்கள் தமக்கு இழைக்கப்படும் கொடு மைக்காக நம்மைத் தண்டிக்கும் சக்தியைப் பெறுத ஒரே காரணத்தால். இது முறையா - நீதியா - தகுமா, நெடுநாட் களுக்குச் செல்லுமா - இவை கேள்விகள் அல்ல - எண்ணத் தில் கபடமில்லாத எவருக்கும் இருக்கும் இருதயத் துடிப்பு கள்.

பொருளைக்காட்டி மறைப்பார் குழந்தைகளிடமிருந்து பெற்றோர் நாமோ புனித ஸ்தலங்களின் பெருமையைக் கூறிப், பூட்டிவிடுகிறோம், அங்கு ஒரு குறிப்பிட்ட சமூக மக் கள் வரக்கூடாது என்று. ஏன்? முடிந்தது செய்து வந்தோம், என்பதுதான் உண்மையான காரணம், மற்றக் காரணங்கள், மனதிலே எழும் அலைகள், உண்மையல்ல.

பயனும் பெருமையும் இருப்பதாகவும் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அதே இடத்துக்கு ஒரு குறிப்பிட்ட கூட்டத்தி னரை மட்டும் நுழையக்கூடாது என்று சொன்னுல், எவ்வ ளவு வேதனை இருக்கும், கூறும் நமக்கு எவ்வளவு கடினமான மனது இருக்கவேண்டும் என்பதை எண்ணிப்பாருங்கள். இன் றிரவு உங்கள் கையை மூடிக்கொண்டு, உங்கள் வீட்டுக் கொஞ்சு மொழிக் குழந்தையைக் கூப்பிட்டுத் 'தம்பி, கைக்

குள்ளே ஒரு அருமையான வஸ்து இருக்கிறது - பளபளப்பானது - யாருக்கும் கிடைக்காதது என்று கூறிவிட்டுக் குதித்துக்கொண்டே அந்தக் குழந்தை அணுக, அதை எனக்குக் கொடேன் என்று கொஞ்சிக் கேட்கும்போது, ஊஹூம் .... தரமுடியாது - உனக்கல்ல அது. தரமாட்டேன் என்று கூறிப்பாருங்கள், நீங்கள் படுகிற பாடு தெரியும். நியாயந்தான்-எத்தனை கிள்ளுகளோ, எவ்வளவு மல்லுகளோ – அழக்கூட செய்யும் குழந்தை - அம்மா அவசரமாக ஓடிவந்து, குழந்தையை அணைத்துக்கொண்டு 'பொல்லாத விளையாட்டு என்று கூறி, நமது கரத்தைப் பிடித்து இழுத்துக் 'குழந்தையை ஏமாற்றுகிறீர்கள் என்று கோபிப்பார்கள்.

குடும்பத்தைப் பொறுத்த மட்டிலே, இதிலே ஒருவகைக் குதூகலம்கூட இருக்கும். குழந்தையின் உள்ளத்திலே எவ்வளவு வேதனை ஏற்பட்டிருக்கும் தெரியுமா ?

குழந்தையின் மனமே இப்படி, நாம் செய்துவரும் கொடுமை, எட்டுக் கோடி மக்களுக்கு, இறைவனின் இல்லத்தின் அருமைகளைக் கூறிக்கொண்டே, அந்த இடத்தில் மட்டும் நீ வரக்கூடாது என்றும் கூறுகிறோம் சரியா! என்று யோசித்துப் பாருங்கள்.

பக்தர்களைப் பரமன் வாழும் இடத்துக்குச் செல்லவொட்டாது தடுப்பது, சேயைத் தாயிடமிருந்து பிரிப்பது போன்ற பாதகமொன்று, இதோபதேசம் செய்து பார்த்தாயிற்று.

இந்த மார்க்கத்தில் இன்னுள் இழுக்குள் இந்தத் தீண்டாமை, அந்நாளில் ஆன்றோர் வாழ்ந்த விதம்வேறு, சான்றோரெல்லாம், தீண்டாமையைக் கையாண்டதில்லை என்று விளக்கம் கூறியாகிவிட்டது.

எங்க இந்துமதத்திலே அந்த மக்கள் இருப்பதாகக் கூறிப் பெருமைப்பட்டுப், புள்ளிவிவரம் காட்டிப் பூரிக்கிறோமோ, அதே மதத்திலிருக்கும் மக்களை, மதத்தின் ஊற்றுகக் கருதப்படும் கோவிலிலேயும் அனுமதிக்காதிருப்பது, மனப்புண்ணை, ஆற்ற முடியாத புண்ணை ஏற்படுத்திவிட்டது இதனை ஆற்றிக்கொள்ள அந்த மக்களில் பலர், சிலுவைச் சூரணமோ, இஸ்லாமிய முறையையோ நாடுகின்றனர், இந்து சமுதாயம் குறைந்துவருகிறது என்று யூகம் கூறியாகிவிட்டது.

(தொடரும்)

தீண்டாமை



(என். இ. பாலகுரு.)

1. தீண்டாமை என்ற கொடும் நோயையிந்தத்
திருநாட்டில் புகுத்திவைத்த தீயரெல்லாம்
கொண்டாட்ட வாழ்வினிலே கலந்து இன்று
தீண்டாமை, ஒழிக! எனச் சத்தமிட்டுத்

2. திரிகின்றார் நம்நடுவே வெட்கமின்றி
தில்லுமுல்லுக் காரரிவர் கூச்சலாலே
அறியாமை ஒழிந்திடுமோ? நாட்டீர்! சொல்வீர்!
நரிக்கூட்டம் செத்தபிணம் காத்தல் உண்டோ?

3. தீண்டாமை ஒழித்திடுவோம்! என்றே இன்று
திறக்கின்றார் கோவில்களை நம்மையாள,?
தொண்டாற்று கின்ற? ஒரு கூட்டத்தார்கள்
தொண்டாற்றும் பெருவுளத்தைப் படைத்துள்ளோரே!

4. இயம்புகிறேன் ஒருவார்த்தை கேட்பீர்! சற்றே,
செய்கின்றீர் கோவில்களைத் திறக்கத் தொண்டு?
செய்திடுவீர் தாசிமக்கள் இன்றே நம்மைச்
செப்புகின்ற ஏடுகளை எரிக்கத் தொண்டு.!

பெண்கள் பகுதி

மாதர் முன்னேற்றம்.

(திரு. மி. சீனிச்சாமி சாத்தூர்)

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் முதலாவதாக அந்நாட்டிலுள்ள பெண்கள் எல்லோரும் சகல துறைகளிலும் முன்னேற்ற மடையவேண்டும். முன் காலத்தில் நமது பெண்கள் இப்பொழுது தொட்டிலாட்டிய கை செங்கோலேந்தி நின்றது. இடைக்காலத்தில் மதக்கொள்கைகள் நம்மவரிடையே நுழைந்ததினால் பெண்கள் அடுப்பங்கரையை விட்டு அப்பால் நகரக்கூடாதென்ற மூடக்கட்டுப்பாடு இருந்து வந்தது. ஆனால், காலம் மாறி வரவர அந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் தளர்ந்துபோய் விட்டது. இன்று சகல துறைகளிலும் எண்ணற்ற நாரீமணியர் பலர் ஈடுபட்டு அழியாக்கீர்த்தியை அடைந்துவிட்டனரென்பது வெள்ளிடைமலை.

தீரர் சுபாஷ் சந்திர போஸின் சுதந்திரப்படையில் திருமதி லட்சுமி ஓர் படைத்தலைவியாக நின்று அரும் பெரும் காரியங்களைச் சாதித்து நம் தாய் நாட்டிற்கே உரிய ஓர் மங்காப்புகழை நிலை நாட்டினர். "வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் வேண்டி வந்தோமென்று கும்மியடி; சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்சாதி படைக்கவும் செய்திடுவோம்" என்று மிக ஆர்வத்தோடு, உணர்ச்சியோடு, உற்சாகத்தோடு வழி காட்டுகிறது இன்றைய நம் மாதர் உலகம். "ஆண்களுக்குப் பெண்கள் இளைப்பில்லை காண்" என்ற பாரதியின் உண்மைக்கனவு இன்று நனவாகிறதுகண்டு எந்தப் பெண்மணியும் புன்னகை பூக்காமலிருக்க முடியாது. எழுந்தோம், விழித்தோம், போராடுவோம், எங்கள் உரிமைகளை அடைவோம் இனியும் உறங்கமாட்டோம், இதோ உறங்கும் பெண்மக்களையும் தட்டி எழுப்புகிறோம், நாட்டின் எதிர்காலத் தலைவிகளாக, செயலாளர்களாக, செம்மல்களாக எல்லாப் பெண்களையும் ஒன்று திரட்டக் கிளர்ச்சியிலும் கிளம்பிவிட்டார்கள். நமது மங்கையர்க்கரசிகள். இந்த எழுச்சியின் அறி குறியே ஆங்காங்கு மாதர் மகா நாடும், மாதர் சங்கமும் கூட்டப்படுவதாகும்.

ஆகவே நாட்டின் உயர்வுக்குப் பெண்கள் முன்னேற்றம் மிக மிக அவசியம். மாதர்கள் முன்னேறாத தேசம் எக்காலத்திலும் மாண்புடன் விளங்கமுடியாது. மேற்கண்டவாறு

நமது பெண்கள் எழுச்சியுற்ற போதிலும் இன்னும் குக்கிராமங்கள் முதல் பல இடங்களிலும் நம் மாதர்களின் நிலை என்ன? அந்தோ பரிதாபம்! "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்று ஆணடிமையாய்க் கிடக்கின்றனர். பாண்டிமாதேவி வம்சத்தில் பிறந்த நம் பாரத நாட்டுப்பெண்கள் இன்று வீதியில் விருட்டி தட்டுகிறார்கள். வீணே பிரிந்தலைகின்றனர். ஆண்டாள் குலத்திலுதித்த நம் அம்மையார்கள் இன்று காரியத்தை விட்டு விட்டு ஆடு மாடுகளை மேய்க்கின்றனர். அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றனர்." அக இருள் அகற்றி அறிவொளி வீசாது நம் தாய்மார்கள் அந்தகாரத்தில் வாழ்க்கையை நடாத்துகின்றனர். நம் பெண்களில் எழுத்தறிவு பெற்றவர் மிகக்குறைவு. உயர்தரக்கல்வி கற்றவர்கள் அதனிலும் மிகக்குறைவே. இப்படியாக உயர்தரக்கல்வி கற்றவர்களில் வீட்டை விட்டு வெளியேறி, சமய, சமூக, தேச சேவை செய்யக்கூடிய மாதர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

ஆகவே நம் மாதர்கள் நிலைமை எவ்வளவோ சீர்திருந்த வேண்டும். இந்நிலை முழுதும் விரைவினில் மாற நம் மாதர்கள் வீறு கொண்டெழவேண்டும். சமூகத்தில் சமத்துவம், சகோதரித்துவம், சுதந்திரம் நிலை நாட்டப்படவேண்டும். ஆங்காங்கு அறியாமை என்னும் படுகுழியில், முயற்சி என்னும் மண்ணை வெட்டி, அறிவு என்னும் விதையை நட்டு, மாதர் சங்கம் என்னும் நீரைப்பாய்ச்சவேண்டும். உண்மையும் பயனும் உள்ள கல்வியை நம் மாதர்கள் அடைய பெண் பாடசாலைகள் பல ஏற்படுத்தவேண்டும். "கோவை முரசு" போன்ற நம் மாதர் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இனிய சஞ்சிகைகளை மாதர்கள் தவறாது வாங்கி வாசிக்கவேண்டும். "கோவை முரசைப்" பின்பற்றி மாதர்கள் தங்களின் முன்னேற்ற புரட்சிப் போர் முரசை எங்கும் ஒலிக்க ஆவன செய்ய அணிவகுத்து முன் வரவேண்டும். ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ, முட்டுக்கட்டையாக உள்ள எதையும் மாதர்கள் தகர்த்தெறிய வேண்டும். அரசாங்கத்தாரும் பெண்கள் உயர்வுக்கான திட்டம் வகுக்க வேண்டும். சட்டம் நிறுவ வேண்டும். ஆதலால் லட்சிய மாதர்களாகிய கண்ணகி, தமயந்தி, இந்திராணி, கஸ்தூரி பாய், சரோஜினி தேவி, குஞ்சிதம், நீலாவதி போன்ற மங்கையர்க்கரசிகளின் மாசற்ற வழியைப் பின்பற்றி, நம் நாட்டைப் புனிதமாக்க மாதர்களே வருக! தங்கள் வரவு நல்வரவாகுக! திரண்டு, எல்லோரும் வாரீர்! வெற்றி நமக்கே! பெண் உலகம் வாழ்க!

கோவையில் டி. கே. எஸ். சகோதரர்கள்.

தமிழ் நாட்டில் சிறந்த கலைக்கோவிலாகக் கோவையில் கட்டப்பட்டிருக்கும் ஷண்முகா அரங்கத்தில் டி. கே. எஸ். சகோதரர்களின் "ஔவையார்', நாடகத்துவக்க விழா இன்றிரவு 9-30 மணிக்கு இந்திய சர்க்காரின் நிதி மந்திரி திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. செட்டியார் அவர்கள் பேசுகையில் "எனக்கு சிறு வயது முதலே நாடகங்கள் பார்ப்பதில் ஆர்வமுண்டு. சுமார் 40-ஆண்டுகளுக்கு முன் நாடகக் கொட்டகைகள் இருந்த நிலையையும், இன்றைய நிலையையும் பார்த்தால், நாட்டில் கலைத்துறை வேகமாய் வளர்ந்து வருகிறதென்றே கூற வேண்டும். இவ்வளவு அழகான ஒரு கலையரங்கத்தைக் கோவையில் சிருஷ்டித்தவர்களை கோவைநகர மக்களின் சார்பில் நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதிலும் டி. கே. எஸ். சகோதரர்களின் ஔவையாரை இங்கு ஆரம்பம் செய்தது மிகப் பொருத்தமானது. சகோதரர்களின் நாடகங்களை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அவர்களுடைய தனிப்பட்ட நடிப்புத் திறமையை தமிழ் நாடுமுழுவதும் நன்கறியும் நான் புகழவேண்டியதில்லை. சகோதரர்கள் கலையை வளர்ப்பதோடுமட்டும் நின்றுவிடவில்லை. கலையின் பேரால் நாடகமேடையைக் கைப்பற்றிக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கும் மொழி வளர்ச்சிக்கும் சமூக சீர்திருத்தத்திற்கும் சீரிய முறையில் தொண்டு புரிந்து வருகிறார்கள். அவர்கள் நீடூழி வாழ்ந்து இதைப்போல் பயன் தரும் நாடகங்கள் பலவற்றை நடித்து தமிழ்நாட்டுக்குச் சேவை செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். என்று கூறினர்.

டி. கே. பகவதி தலைவருக்கு மாலை சூட்டி வரவேற்றுப் பேசுகையில், புதிய நாடகங்கள் பலவற்றை இக் கலையரங்கத்தில் அரங்கேற்றப் போவதாகவும் எல்லோரும் ஆதரவளிக்கவேண்டுமெனறும் கேட்டுக்கொண்டார். கடைசியாக திரு. ஏ. என். மருதாசலம் செட்டியார் அவர்கள் நன்றிகூற விழாஇனிது முடிந்தது. நகரத்தின் பிரபலஸ்தர்கள் அனைவரும் இவ் விழாவிற்கு விஜயம் செய்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

"கோவை முரசு."

சந்தா விபரம்.

உள்நாடு தனிப்பிரதி	0—4—0	ஆண்டு சந்தா	ரு. 3—0—0
வெளிநாடு ,,	0—5—0	,,	4—0—0

விளம்பரம்.

வெளி அட்டை	ரு. 100—0—0	உள் அட்டை	ரு. 75—0—0
சாதா பக்கம்	ரு. 50—0—0	அரைப்பக்கம்	ரு. 25—0—0

கோவை மகாநாடு

திரு. V. C. வெள்ளியங்கிரிக் கவுண்டர் M. L. A. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

23—11—47 மாலே 2-30 மணிக்கு டவுன் ஹாலில் மகாநாடு ஆரம்ப மாயிற்று திரு. வெங்கிடசாமி நாயுடு தலைவரை பிரேரபித்தார். பலர் ஆமோதிக்க தலைவர் தலைமை தாங்கினர். மகாநாடு வெற்றியடைய விரும்பி K. K. சுப்பண்ண கவுண்டர், அண்ணாமலை பிள்ளை, பழைய கோட்டை பட்டக்காரர் ஆகியவர்களிடமிருந்துவந்த வாழ்த்துச் செய்திகளை திரு. R. M. குமாரசாமிக் கவுண்டர் அவர்கள் வாசித்தார்.

திரு. V C சுப்பைய கவுண்டர் தலைவரையும் பிரதி நிதிகளையும் வரவேற்று, கண்ட்ரோலால் மக்கள் படும் கஷ்டங்களை எடுத்துரைத்தார் தலைவர் தமது முகவுரையில் குடியானவர்கள் படும் கஷ்டங்களையும், விலைவாசி சரியாகக் கூட்டிக்கொடுக்காததினால் உணவு உற்பத்தியை குறைத்துக் கொண்டார்கள் என்றும் இதே நிலைமை நீடிக்குமானல் குடியானவர்களும் பொது ஜனங்களும் மிக மிக கஷ்டப்படுவார்கள் என்றும் கூறினர்

திரு P S G கெங்கா நாயுடு அவர்கள் தமது பிரசங்கத்தில் காந்தியாரே ரேஷன் கட்டுப்பாட்டை எடுக்கசொல்லிவிட்டதால் நமது மதிப்பிற்குறிய சர்க்காரும் விரைவில் எடுத்து விடுவார்கள் என்று தாம் உறுதியாக நம்புவதாகவும், மொத்தம் 25 ஜில்லாக்களிலே 15 ஜில்லாக்கள் எடுத்துவிடலாம் என்று அபிப்ராயப்படுவதாகவும் மற்றும் 11 ஜில்லாக்கள் தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டால் மிகநலமாய் இருக்கும் என்றும் பேசி முடித்தார், தீர்மானத்தின்மீது திரு V K பழனிச்சாமிக் கவுண்டர் திரு R ராமகிருஷ்ண நாயுடு M L A மற்றும் பலரும் விரிவாகப் பேசினர்கள் திரு R M குமாரசாமிக் கவுண்டர் உருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினர் பல முக்கிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன தலைவர் முடிவுரைக்குப் பின்னர் திரு R ராமகிருஷ்ண நாயுடு M L A வந்தனம் கூற மகாநாடு இனிது முடிவுற்றது

அடுத்த முரசில்!

கவியரசர் பாரதி தாஸன்.
விஞ்ஞான விற்பன்னர் தோழர் G D நாயுடு.
அறிஞர் S. லக்ஷ்மிரதன் பாரதி M. A., B L.,
,, T. R. சுந்திரம் பிள்ளை B. A, B. L.,
,, C. N. அண்ணாத்துரை M. A.,
,, K. அன்பழகன் M. A.,
,, S. குருசாமி B. A.,
,, பெரியசாமி (தூரன்)
,, C. A. அய்யாமுத்து.
,, M. S. கனகராஜன்.
,, கஜேந்திரன் B A.
ஆகியோரின் எழுத்தோவியங்கள் எதிர்பாருங்கள்!

பட விமர்சனம்.

கன்னிகா.

தயாரிப்பு : பக்ஷிராஜாஸ் ஸ்டுடியோ.
வெளியீடு : நாராயணன் கம்பெனி.
முக்கிய நடிகர்கள் : டி. இ. வரதன், M. S. சரோஜனி, N. S. கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலியோர்.
கதை வசனம் : இளங்கோவன்.
பாட்டு & சங்கீதம் : பாபநாசம் சிவன்.
டைரக்டர் ; ஸ்ரீமான் எஸ். எம் ஸ்ரீராமுலு நாயுடு.

தென்னாட்டில் வடநாட்டு ஸ்டுடியோவைக காட்டிலும் முன்னணிக்கு வரவேண்டியது பக்ஷிராஜாஸ் ஸ்டுடியோதான் என்ற வார்த்தைச்கு அறிகுறியாக இந்தக் 'கன்னிகா' என்ற படமே எடுத்துக் காட்டுகிறது. மிக மிக உன்னத முறையில் காட்சி ஜோடனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கண்ணைக் கவறுகின்றன உடைகள். அதற்கு மெருகு கொடுத்தாற்போல வேஷ அணிவிப்பும் அமைந்திருக்கிறது. படப்பிடிப்புமிகத் தெளிவாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு புராணக் கதையை அதுவும் அதில் ஜனங்கள் ரவிக்கத்தகுந்த பாகம் எதுவும் இல்லாத ஒரு கதையை, நல்ல நிலைக்கு அதாவது ஜனங்கள் பார்த்து மகிழும்படி செய்ய அரும்பாடு பட்டிருக்கிறார் டைரெக்டர் ஸ்ரீமான் எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு. அவருக்குள்ள கலை ஆர்வம் மேன்மேலும் பெருகி வளர்வதாக.

M. S. சரோஜனி தனது எழிலான முகத்தோற்றத்தைக் காட்டி இன்னிசையையும் ஊட்டி இயற்கை நடிப்பில் நம் மனதை ஈர்த்துச்சென்றுவிடுகிறார்.

கதை வசனம் : படத்தைப்பார்த்துவிட்டு இளங்கோவன் எழுதிய வசனம்தானா! என்று சந்தேகப்படவேண்டி இருக்கிறது அவருடைய எழுத்து வன்மை ஒரு இடத்திலாவது சோபிக்கவே இல்லை என்பதை நினைக்க வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. முன்பு இவருக்கிருந்த பேரும் புகழும் "நாளுக்கு நாள் நகர்ந்ததடி அம்மானை" என்ற நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது.

பாட்டு & சங்கீதம் பாபநாசம் சிவன் பாடலுக்கே ஒரு அலாதி கௌரவம் இருந்து வந்ததுதான். ஆனால் இந்தப்படத்தைப் பார்த்தவர்களிடம் அப்படிக் கூறினால் நம்முடன் அவர்கள் சண்டைக்கு வந்தால் அதற்காக ஆச்சர்யப்படுவதற்கில்லை.

பாம்பு நடனமும் 'சர்க்கஸ்' வேலைகளையும் காட்டின ஆங்கிலோ இந்திய மாதின் புகழ் இந்தப் படத்துக்கு ஒரு மகுடம் வைத்ததுபோல் இருக்கிறது தன் உடலைப் பாம்பு போலவே வளைந்து வளைந்து செல்வதைப்போல செய்து காட்டின காக்ஷி மிக மிக மெச்சத்தகுந்தது.

நகைச்சுவை அரசன் என். எஸ். கிருஷ்ணனும் டி. ஏ. மதுரமும் நடிப்பிலே ஒரு புது மாதிரியை இந்தப் படத்தின் மூலம் ரஸிகர்களுக்கு நடித்துக் காட்டுகிறார்கள். எப்பேர்ப்பட்ட நடிப்பையும் வெகு சுலபமாக அநாசயமாக நடித்துக் காட்டுவோம், நடிப்புக்கலை எங்களுடன் பிறந்தது தான்; அந்த ஆற்றலை இந்தப் படத்தின் மூலம் தெரிந்துகொள்ளுங்கள் என்று இந்தக் 'கன்னிகா' படத்தில் நிரூபித்துக் காட்டுகிறார். ஏற்கெனவே தனக்கென்று ஏற்பட்ட ஹாஸ்ய ரஸத்தோடு இயற்கை நடிப்பையும் கலந்து அளிக்கும் விருந்து நமக்கு அமிர்தமாக இருக்கிறது.

சுருங்கச் சொன்னால் பொது ஜனங்கள் பார்த்து ரஸிக்கவேண்டிய படங்களில் 'கன்னிகா'வும் ஒன்றென்று கூறலாம்.

காலப் போக்கை அனுசரித்து நம் நாட்டு மக்களின் முன்னேற்றம் கருதி, தேச முன்னேற்றம், சமூக முன்னேற்றம், மூடப் பழக்கவழக்கங்களை ஒழித்தல், தீண்டாமை, இது போன்ற விஷயங்களை அடிப்படையாக உள்ள கதைகளை வைத்துக் கொண்டு அதோடு ஸ்ரீமான் எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடுவுக்கு இருக்கும் கலை ஆர்வத்தையும் அதிலே கொட்டி, படங்களைத் தயாரித்து வெளியிடுவாரேயானால் அன்னாரின் புகழ் முன்னை விடப் பன்மடங்கு உயர்ந்துவிடும் என்பதையும் இங்கு எடுத்துக் காட்டுகிறோம்.

அறிஞர் ஆசை.

(திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம்)

எனது நாடு தமிழ் நாடு, எனது மொழி, தமிழ் மொழி ஆகவே, நான் தமிழன் என்று நெஞ்சு நிமிர்ந்து கூறும் தகுதியும், வாய்ப்பும் உள்ள தமிழ் மக்கள் ஒவ்வொருவரும், எண்ணத்தாலும், துணிவாலும், செயலாலும், சொல்லாலும், பொருளாலும், உலகுக்குயிர் வழங்கியதும், ஓங்கு பெரும் புகழ் பெற்றதும் ஒப்புயர்வு கூற முடியாததுமாகிய நமது அரும் பெரும் முத்தமிழைப் போற்றி வளர்க்கத் தொண்டுசெய்ய வேண்டுமென்பதும், அதன்மூலம் தமிழை முன்னைய உயர் நிலையில் வைத்து ஆட்சி புரியச் செய்து நாமும் பிறரும் நல்வாழ்வு வாழ வேண்டுமென்பதும் எனது ஆசை.

கோவை வின்சென்ட்ஸ் தியேட்டர்ஸ்

வெறைட்டி ஹால் டாக்கீசில்

மாலை 6-30க்கு 28-11-47 வெள்ளி முதல் இரவு 9-45க்கு

' சன்னியாசி '

3-வது எடிசன் டாக்கி தியேட்டரில் வாரம்

மாலை 6-30க்கு 25-11-47 செவ்வாய் முதல் இரவு 9-45க்கு

மகாத்மா உதங்கர்

பாலஸ் தியேட்டரில்

மாலை 6-15க்கு 28-11-47 வெள்ளி முதல் இரவு 9-45க்கு

" ஜாலத் தீவில் - மனித வேட்டை "

வின்ஸன்ட்

ஹவுஸில்

மாலை 6-30 9-45க்கு

28-11-47 வெள்ளி முதல்

9-வது வாரம்

பைத்திய காரன் ?

வருகிறது !

எமது அடுத்த படம்

ராம ராஜ்யம்

4-வது கர்னாட்டிக் தியேட்டரில் வாரம்

மாலை 6-30க்கு 28-11-47 வெள்ளி முதல் இரவு 9-45க்கு

துளசி ஜலந்தர்

P. VINCENT, Mg. Proprietor.

சிட்டி போட்டோ ஒர்க்ஸ்

(1907-ல் நிறுவப்பட்டது)

உரிமையாளர்: **B. V. சாமி & சன்ஸ்.**

தென்னிந்தியாவில் முன்னணியில் நிற்கும் போட்டோ எடுக்குமிடம்.

கண்காட்சிகளில் தங்கப்பதக்கங்கள் பெற்றுள்ளது.

வெறைட்டி ஹாலுக்கு எதிர்
கோயமுத்தூர்.

வெலாக்ஸ் பிரிண்டிங்கில் தனிப்பெயர்



ஆண்ட்ரியா : : ரேடியோ

மனத்தைக் கவரும் தோற்றமும் தெள்ளத்தெளிவான ஒலியும் நீடித்த காலத்திற்கென செய்யப்பட்ட வேலைப்பாடும், சிக்கன வாழ்விற்குரிய விலையும் நிரூபித்துக் காட்டக் கூடியது.

ரேடியோ எலெக்டிரிக்ஸ்,

பழைய தபாலாபீசு ரோடு, :: கோயமுத்தூர்.

ரிஜிஸ்டர்டு ஆப்பீஸ்:—
குணியமுத்தூர்,
கோயமுத்தூர்.

போன் :— 149.
தந்தி. "சுதேசி"

விஜயலக்ஷ்மி மில்ஸ்
லிமிடெட்

இந்திய முதல் இந்திய தொழிலாளர்
இந்திய நிர்வாகம்

எல்லாம் இந்திய மயமான

தேசியத் தொழிலை ஆதரியுங்கள்.

பேர் பெற்ற கோயமுத்தூர் மில்களின் வரிசையில் சேர்ந்த
இந்த மில் தக்க அனுபவஸ்தர்களால்
நிர்வகிக்கப் பெற்று வருகிறது.

11,032 கதிர்கள்

ஸ்பின்னிங் 60 நெ. வரை ரிங்கு நூல் தயாரிக்கப்படுகிறது
வருஷந்தோறும் பங்குதாரர்களுக்கு நல்ல வட்டி
தரப்பட்டு வந்துள்ளது.

Managing Agents & Secretaries:—

**GUPTA & Co., Ltd. Kuniamuthur, Coimbatore,
S. India.**

-: புது ரக ஜவுளிகள், :-

விலை மிகவும் நயம்

புது வரத்து **நாணயமான சரக்கு**

பெங்களூர், காஞ்சீவரம், சேலம், கொரநாடு
பட்டு சேலைகளும்,

பெங்கால் சில்க் சேலைகள்

(யாவும் நூதன பார்டர்களும் பேன்சிகளுடன் உள்ளது)

உள்ளூர், சேலம், உறையூர், மதுரை
60, 80 & 100 நெ. நயமான சேலைகள்
சேலம் & மதுரை வெண்பட்டு & நூல்
வேஷ்டிகளும், துப்பட்டாக்களும்
அங்கவஸ்திரங்களும்

ஆடவருக்கும், பெண்களுக்கும் குழந்தைகளுக்கேற்ற பலவிதமான உடுப்பு தினுசுகளும், பாவாடை & சித்தாடைகள், கோட்டிங், ஷர்ட்டிங், பனியன் மற்ற பெட்ஷீட்டு, கர்டன் துணிகள், மெத்தை, தலையணை

Etc., Etc.

ஒரு தடவை விஜயம் செய்க.

S. பீமைய செட்டி,

"ஒயிட் ஷாப்" :: கோயமுத்தூர்.

(இது ஒரு பிரகடனமல்ல.)

இண்டியன் நேஷனல் டிரேடர்ஸ் (கோயமுத்தூர்) லிட்.

(இந்தியன் கம்பெனி ஆக்டின் கீழ் அமைக்கப்பெற்றது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 2,00,000. வெளியீடு ரூ 2,00,000.
பங்கு 1-க்கு ரூ. 10-0-0 வீதமுள்ள 20,000 பங்குகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது.

பங்கு 1-க்கு விண்ணப்பத்துடன் ரூ. 5—0—0
பங்கு ஒதுக்கப்பட்டதும் ரூ. 5—0—0

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் 24-4 திருப்பூர் ரோடு, உடுமலைப்பேட்டை.

போர்டு ஆப்டைரெக்டர்கள்.

1. N. வெங்கிடுசாமி நாயுடு, வியாபாரம், பொள்ளாச்சி,
2. P. பெரியசாமி பிள்ளை வியாபாரம், உடுமலைப்பேட்டை.
3. A. J. இமாம் உசேன் லாண்ட் லார்டு, அங்கலக்குரிச்சி.
4. V. K. அழகப்ப கவுண்டர் லாண்ட் லார்டு, வடுகபாளையம் பொள்ளாச்சி.
5. M. செல்லப்ப பிள்ளை வியாபாரம், உடுமலைப்பேட்டை.
6. P. K. திருமூர்த்தி முனிசிபல் கௌன்சிலர், பொள்ளாச்சி.
7. K. R. கிருஷ்ணசாமி செட்டியார் மணி விலாஸ் ஓட்டல், உடுமலை.
8. K. வெங்கிடாசல நாடார் சைகிள் டிப்போ, உடுமலை.
9. A. சங்கர கவுண்டர் முனிசிபல் கௌன்சிலர் உடுமலை
10. R. நாராயணசாமி நாயுடு, லாண்ட் லார்டு, வாளவாடி.
11. B. துரைவேல், லாண்ட் லார்டு, ராமபட்டணம்,
12. S. பாலகனகராஜு செட்டி வியாபாரம், சுல்தான்பேட்டை

மானேஜிங் ஏஜண்டுகள்
சுவாமி & கம்பெனியார், உடுமலை.

பாங்கர்கள்:—
தி செண்டிரல் பேங் ஆப் இந்தியா லிமிடெட்.

ஆடிட்டர்,
V. A. நாராயணன் G, D. A., R. A., R. S. புரம், கோவை.

புரோக்கர்.
M. மகாலிங்கம் பிள்ளை, உடுமலை.

கம்பெனியின் யதாஸ்து நிர்வாக விதிகள் முதலியவைகளின் நகல் கம்பெனியின் தலைமை ஆபீசிலும் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும் பங்குகளுக்கு விண்ணப்பத்துடன் செலுத்தவேண்டிய துகையுடன் விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. வியாபாரத்திலும் தொழிலிலும் அநுபவ மிகுந்த நிர்வாகஸ்தர்களைக்கொண்டு ஏற்படுத்தியிருக்கும் இக்கம்பெனியின் பங்குகளை வாங்கி நல்ல லாபம் அடையும்படி பொது ஜனங்கள் கோரப்படுகிறார்கள்.

உடுமலைப்பேட்டை
30—11—47

இப்படிக்கு
நிர்வாக போர்டார்

"பருவத்தே பயிர் செய்."

வேளாண்மைக்கு அத்யாவசியம்
பருவ காலம்.

முதுமைக்கு பாதுகாப்பு
இன்ஷ்யூரன்ஸ்.

குறைந்த சந்தா விகிதத்தில் பல நூதன
திட்டங்கள் கொண்ட

"இந்தியா லைப்" பாலிஸி மூலம்
குடும்ப சேமிப்பை உறுதியாக்கி

வயோதிக காலத்தின்
கவலையை தவிர்க்கவும்.

31-12-1945 ல்

போனஸ் பிரிவினை:

ஜீவிய பாலிஸிக்கு ரூ. 40

எண்டௌமெண்டு ரூ.30

தமிழர் ஸ்தாபனம்.

இந்தியா லைப் பெனிபிட்
அஷ்யூரன்ஸ் சொஸைடி, லிமிடெட்.
தலைமை ஆபீஸ்: கோயமுத்தூர்.

தலைவர்: V.C.வெள்ளிங்கிரி கவுண்டர்.

M. S. பழனியப்ப முதலியார், B. A.,
மானேஜிங் டைரெக்டர்.

C. R. சிவ சுப்ரமணியம், B. A.,
செக்ரெடரி.

இன்றே விபரங்களுக்கு எழுதவும்.

Edited & Published by S. P. Meenakshi Ammal, Sulur.
Printed at the Sri Kathiresan Press, Coimbatore.
Mg. Editor S. A. Manickam.

டெலிபோன் நெ. 224.　　　தந்தி விலாசம், "கஸ்தூரி"

ஸ்ரீ கஸ்தூரி மில்ஸ் லிமிடெட்,

சிங்கா நல்லூர் போஸ்டு, கோயமுத்தூர் ஜில்லா.

மொத்தம் கதிர்கள் 11220.

40s, 42s, & 2/42s நம்பர்

நூல் உற்பத்திக்கு பிரக்யாதியடைந்தவர்கள்.

பரீக்ஷையிலும், அனுபவத்திலும்
மற்ற எல்லா நூல்களைக்காட்டிலும் மிகவும்
உயர்ந்தது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட
விஷயம்.

619-ம் நம்பர் டெக்ஸ் மார்க்கை பார்த்து வாங்கவும்.

M/s. C. N. வெங்கிடபதி நாயுடு & Co., Ltd.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரட்டரீஸ்.

சுவர்ண மாளிகை

ஒளி மிகுந்த

தங்க, வைர ஆபரணங்களுக்கு

P. A. ராஜு செட்டியார் & பிரதர்,

வைர வியாபாரம், கோயமுத்தூர்.

தந்தி: ராஜா. போன்: 268.